
VASANTHAM Tamil Monthly 2-6 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

மாத இதழ்
AR-RABAEE
அக்டோபர் 2008 வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்! October 2008



இந்திய முஸ்லிம்கள் கல்வி மேம்பாட்டுத் திட்டம்



அதிசயங்களுக்கு ஆதாரம் யார்?



ரமளானின் முக்கிய வரலாற்று நிகழ்வுகள்



ஒரு தெய்வமா? பல தெய்வமா?



அதிசய சம்பவம் அன்னை தந்த அழகிய ஆனந்தம்

## வறட்சிமிகு வறுமையும் புரட்சிமிகு இஸ்லாமிய தீர்வுகளும்!



IPC

# உங்கள் வாழ்வின் இடைவெளிகளை அறிவினால் நிரப்புங்கள்!

IPC
ISLAM PRESENTATION COMMITTEE

மகளிருக்கு
மார்க்க பயிற்சி நெறிமுறைகள் போதிக்கும்
## “இலையுதிர்க்கால சிறப்பு வகுப்புக்கள்”

இஸ்லாமிய நிலையம் - மகளிர்ப் பிரிவு - ரவ்தா

இஸ்லாமியப் பயிற்சி நெறி அரங்குகள்
அக்டோபர் 10 ஆம் தேதி முதல்...
மீண்டும் ஒரு புதிய கோலாகல ஆரம்பம்..!
எம் மகளிர் அனங்குகளுக்காக!

*ஈருலக அறிவையும் செம்மையுறத் தீட்டி...*
*செங்கம்பளத்தில் வாழ்வை பவனி வரச் செய்ய...*
*சொத்தாக அறிவை சேமிக்க முத்தான சந்தர்ப்பத்தை...*
*தொடர்ந்தும் அள்ளித்தரும் இஸ்லாமிய அழைப்பகங்களில்...*
*மகளிரை மட்டும் மையப்படுத்தி...வழங்கும் பாடப் போதகங்கள்....*

தமிழ், சிங்களம் ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிகளிலும் பிற பன்மொழிகளிலும்,..
(அரபு தவிர்ந்த ஏனைய அனைத்தும் இலவசமே!)

தொடர்புக்கு
சகோதரி ஷைய்மா தியாப்
தொலைபேசி: 2511305
உள் அழைப்பு: 112
செல்லிடைப்பேசி: 7290278

தற்போதிருந்தே
ஆரம்பிக்கின்றன பதிவுகள்!

பதிவுகளுக்கு
முந்திக் கொள்வீர்..!




# இந்த இதழில்...!


IPC வழித்தடங்கள்
கோடைக்கால பயிற்சி நெறிமுறை போதனைகளுக்கு ஒரு குளுமை விழா! 10



வரலாற்று சுவடுகள்
ரமளான் மாதத்தில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகள்! 11



தொடர்
பெரும்பான்மை மதங்களில் இறைவனைப் பற்றிய கருத்தோட்டம்! 13




வனிதையர் பக்கம்
நிரூபணமாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிஜங்கள்! 14



வனிதையர் பக்கம்
அதிசய சம்பவம்! அன்னை தந்த அழகிய ஆனந்தம்! 15



மழலையர் சோலை
தமிழ் கற்போம் வாருங்கள் ! 16



வாசகர் ஓலைகள்
வசந்த ஆயுளின் சுகந்தமிகு சுவாசங்கள் 2

சிறப்புத் தலையங்கம்
ஆசிரியரிடமிருந்து..!
அழகிய மார்க்கம் குறித்து அஹிம்சைத் தலைவன்! 3

தொடர்
நான் திருக் குர்ஆன் பேசுகின்றேன்! 12


கவித்தூறல்கள்
சித்தத்தை உறைய வைக்கும் வியத்தகு பக்கங்கள்! 17

உடல்நலம்
அழகுகளில் ஆரம்பம்.., அனர்த்தங்களில் முடிவு..! 18

சுற்றத்து செய்திகள்
பிம்பம் உடைத்த பஹ்ரைன் பாவை! 19

போட்டி
அறிவுக் குறுக்கெழுத்து - 6 20





4
வறட்சிமிகு வறுமையும் புரட்சிமிகு இஸ்லாமிய தீர்வுகளும்!
முகப்புக் கட்டுரை



வசந்தம்
வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!

VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
OCTOBER 2008
அக்டோபர் 2008
மலர் ௨ இதழ் ௬



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

EDITOR
ஆசிரியர்
M.A. Abdul Musavir

EDITORIAL BOARD
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq
Zinoofa Ansar

DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC



PUBLISH
வெளியீடு
IPC
KUWAIT




CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
2447526, 2444117 Extn: 208
FAX
2400057
Attn: IPC—VASANTHAM
e-mail
amusavir@gmail.com
WEBSITE
www.ipc-kw.com


الفهرس



بريد الربيع – كلمة العدد – الفقر وعلاجه في الإسلام – ماحدث في رمضان – أنشطة اللجنة – موقف الإسلام في الأعياد – القرآن يتكلم – تصور الإله في الديانات الشهيرة – صفحة التعليم – السيدة خديجة ام المؤمنين – الأطفال – الطب والصحة – أخبارالعالم

வாசகர் ஓலைகள்



# வசந்த ஆயுளின் சுகந்தமிகு சுவாசங்கள்

கழதங்கள், மின்னஞ்சல்கள், தொலைநகல்கள்



புனித ரமளான் சிறப்பிதழ் கண்டேன். சிறியோர் முதல் பெரியோர் வரை இளைஞர் முதல் முதியவர் வரை.. சுருங்கக் கூறின் 6-இலிருந்து 60 வரை அனைவர் மனத்திலும் நீங்கா இடம்பிடித்துவிட்டது வசந்தம் எனில் அது மிகையல்ல! இரண்டு வரி ஹைகூக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துவிட்டன. வாசகர்களும் இனி ஹைகூக்கள் முயற்சிப்பார்கள்.

ஓவ்வொரு பக்கமும் தரும் விஷயங்கள், நிகழ்வுகள், சம்பவங்கள் என்று அனைத்தும் ஆதாரப்பூர்வமாக, அழகாக சொல்நயத்துடன், அதேவேளை படிப்போர் வெறுமனே படித்து செல்லாமல் வாழ்வில் செயல்படுத்தவும் வகையில் வடிக்கும் வசந்தத்தைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. அனைத்தும் அற்புதம்.

ஆசிரியர் மற்றும் ஆசிரிய குழுமத்தினருக்கு நன்றி கலந்த பாராட்டுக்கள்!ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்!

நூருல் ஹிபா, அம்பகரத்தூர்
சால்மியா, குவைத்

வசந்தம் செப்டம்பர், புனித ரமளான் சிறப்பிதழ் கண்டேன்.

முற்றிலும் புதிய வடிவில் வந்திருக்கின்றது வசந்தம். ஏனைய தமிழ் சஞ்சிகைகளோடு ஒப்பிடும்போது ஆக்கங்கள், வடிவமைப்பு இவற்றில் தன்னிகரற்றது வசந்தம் என்பதை மிகக் குறுகிய காலத்திலேயே நிரூபித்துக் காட்டியிருக்கின்றது வசந்தம்.

குறிப்பாக மழலையர் சோலை தரமான ஆக்கம். திருக்குர்ஆன் இறைவாக்கா என்பதனை எளிய விளக்கங்களோடு மிக அழகாகத் தந்தது முகப்புக் கட்டுரை!இறைநம்பிக்கையாளர்களின் அன்னை பற்றிய சுருக்க வரலாறு அழகிய ஆக்கம்!

விளம்பரங்களிலும் அழகிய செய்தியை தருவது வசந்தத்துக்கே உரிய பாணி! பின் அட்டைப்படம் செதுக்கப்பட்டிருந்ததைத்தான் சொல்கின்றேன்.

முஹம்மத் ர:.பீக்,
கள்ளக்குறிச்சி, தமிழகம்
ஸுப்ஹான்-குவைத்

வசந்த பூங்காவனத்தில்
ஆக்கங்களின் அணிவகுப்பு!
வசந்த மலர் பூப்படைந்ததில்
வாசகர்களின் படையெடுப்பு!
வாழ்க்கைக்குப் பயனளிப்பதால் மனத்தில்
சிறகடிப்பு!
வசந்தகால நினைவலைகளின் புல்லரிப்பு
வாடா மல்லிகையாய் மனத்தில் எழும்புதே
இலயிப்பு!
வசந்தவார்த்தைகள் அடிக்கடி உச்சரிப்பு!
பயன்தரும் பருவகால மழைபோல்
ஆனந்தகளிப்பு!
பருவம்அடைந்ததில் ஆக்கங்கள்அனைத்தும்
அற்புதகுவிப்பு!
அருளாளனின் அறிவுரைகளை
அவனி யோர்க்கு அறிவுஜீவிகள்
அள்ளிவழங்கும் அற்புத ஊற்று!
ஓரிறைவழியில் அனைவரை ஈர்க்கும்
வசந்தமான அழைப்பு!
வசந்தம் மென்மேலும் மணம் மகிழ
எல்லாம் வல்ல இறைவன் அருள்
புரிவானாக!

B.சிக்கந்தர் கான்,
சிதம்பரம்-தமிழகம்
அல்கஸ்ர்-குவைத்

டாக்டர். ஜாகிர் நாயக்கின் கட்டுரை ஆரம்பமே அசத்தல்.. என்னைப் போன்ற தமிழ் ரசிகர்களுக்கு இளவேனிலின் இதம் தமிழ் ஒரு வரப்பிரசாதம்.

கருத்துக் கணிப்புக் கட்டுரை நல்ல முயற்சி. மனிதன் மதத்தைப் புறந்தள்ளி வாழ முடியாது என்பதை இளைய சமூகம் காட்டியிருக்கின்றது.

இளைஞனே..! கவிதை, தோழமை யாரோடு? சரித்திரத்தின் கல்வெட்டுக்கள் ஆகிய அனைத்தும் மாணிக்கங்கள்! அதில் கிரீட வைரமாக அமைந்தது நவ விடியலின் இலட்சியப் பரிமாணம் - ஆசிரியர் தலையங்கம்!

முஹம்மத் இப்ராஹீம்
இராமநாதபுரம் - தமிழகம்
சால்மியா - குவைத்



ஓவ்வொரு மாதமும் அனுசரிக்கப்படும் சிறப்பு தினங்கள் குறித்த விவரங்களை கண்டுபிடித்து அதனைத் தழுவி கட்டுரைகள் வரைந்து, வாசக சிந்தனைகளை அறிவுக் கருவூலத்தால் நிரப்புகின்றீர்கள்.

இந்த முயற்சியில் - அறிவு அகரங்கள், வாழ்வின் சிகரங்கள் சிறப்புக்கட்டுரை தரமான, உயர்ரக எழுத்தாக்கம். இலக்கிய சுவை, இலக்கண ஆளுமை, செய்தி உரம் ஆகியன கலந்து சிந்தையில் ஆழமாகப் பதிந்தது. கட்டுரையாசிரியருக்குப் பாராட்டுக்கள்!

புதிய பகுதிகள் வசந்தத்தை இன்னும் மெருகேற்றுகின்றன.

பிரேம்
தமிழகம் - இந்தியா
ஸுப்ஹான் - குவைத்

ஆகஸ்ட் வசந்த மலர் கண்டேன். ரவ்தா பெண்கள் பிரிவு அழைப்புப் பணியாளர்கள், குவைத் சிறைச்சாலைக்கு சென்று மார்க்க விஷயங்களையும், நல்லொழுக்க, பொது விஷயங்களையம் அறிவுறுத்துவது பாராட்டுதலுக்குரிய விஷயம்.

நவவிடியலன் இலட்சியப் பரிமாணம், சுந்தரதேசத்தின் சுதந்தர வாசம் தலையங்கங்களில் ஆசிரியர் விளக்கங்கள் அருமையிலும் அருமை. படித்துப் பட்டம் பெற்றுள்ள மாற்றுமத சகோதரர்களையும் சிந்தித்துப் பார்க்க வைக்கும் தெள்ளத் தெளிவான விளக்கம்.

உண்மையிலேயே வசந்த மலர் பூத்துத் தான் குலுங்கிக் கொண்டிருக்கின்றது.

வசந்தமலர் வாசகன்
பனைக்குளம் சே. ஜவஹர் அலி
ஷர்க், குவைத்

குகைவாசிகளான இளைஞர்கள் வரலாறு சுருக்கமாக, அதேவேளை முஸ்லிமல்லாதவர்களும் எளிமையாக விளங்கிக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. இதுபோன்ற திருக்குர்ஆனுடன் இணைந்த வரலாற்றுச் சம்பவங்களை வசந்தம் அவ்வப்போது வெளியிட்டால் மாற்றுமத சகோதரர்களும் திருக்குர்ஆனின் வரலாற்று உயர் ஆளுமையையும், அதன் வாய்மையையும் புரிந்துகொள்ள முடியும்.

இளமையில் சாதனை புரிந்தோர் விவரம் அழகு பொக்கிஷம்!

:.பாத்திமா ஜுஹைர்
தஞ்சை - தமிழகம்
அர்தியா- குவைத்

ஸினூ:.பா அன்ஸார் அவர்களின் இளைஞனே...! கவிதை மிக அருமை! அதைப் படிக்கும் ஒவ்வொரு இளைஞரும் தம்மிடம் பொதிந்து கிடக்கும் ஆற்றலை உணர்ந்து, அதனை ஆக்கபூர்வ வகையில் வெளிப்படுத்த வேண்டும். தம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை மறந்து, முதியோர் காப்பகங்களில் அவர்தம் மூப்பு வயதை எண்ணிக் கொள்ளச் செய்யும், இன்றைய இளைய சமூகம் திருந்த வேண்டும். அதற்கு இக்கவிதை பாலம் அமைக்கும்.

ஆசிரியரிடமிருந்து வந்த நவவிடியலின்... மற்றும் தோழமை யாரோடு?,இளமை வசந்தம் ஆகியனவும் அழகு!

சுமய்யா தபஸ்ஸும்
பெங்களூரு - இந்தியா
சால்மியா- குவைத்

ஆகஸ்ட் இளைஞர் சிறப்பிதழ் கண்டேன்.குவைத்தில் வாழும் இளைஞர்களுக்கு வசந்தம் ஒரு வரப்பிரசாதம். ஓவ்வொரு மாதமும் அந்த மாத நிகழ்வுகளை சிறப்பித்து ,வாழ்த்தையும் கூறி, விளக்கத்தையும் அறிந்து அதன் கருத்துக்களை தெள்ளத்தெளிவாக எழுதுவதில் வசந்த வாசம் தெள்ளத் தெளிவாய்.. இதமான தென்றலாய் வீசுகின்றது. இத்தகைய ஆக்கங்களை படைக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இளைய சமூகத்தின் தோழமை யாரோடு? இளைஞனே! மதங்கள் இதயங்களின் மணிச்சரங்கள், இளமை வசந்தம் அனைத்தும் வசந்தத்தை இன்னும் மெருகேற்றும் ஆக்கங்கள்!

அபுமாஹின்,அம்பகரத்தூர்
சால்மியா, குவைத்






# அழகிய மார்க்கம் குறித்து அஹிம்சைத் தலைவன்!

அக்டோபர் 2, காந்தியடிகள் பிறந்த நாள்! அவருடைய அஹிம்சைப் போராட்டத்தின் பல்வேறு தாத்தபர்ய.. பரீட்சார்த்த அம்சங்கள் குறித்து, மேடைகளிலும்... பாடப்புத்தகங்களிலும் முழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் அவர் கண்ட இந்தியா எப்படிப்பட்டது? பல்வேறு மதங்கள் நிறைந்த பாரத திருநாட்டில் இன்று விரைந்து மக்கள் மனங்களில் குடியேறிக் கொண்டிருக்கும் இஸ்லாம் குறித்து அவருடைய நிலைப்பாடு என்ன? தனது மகன் இஸ்லாத்தை ஏற்றபோது அவருடைய மனநிலை என்ன?ஈடு-இணையற்ற இருமை உலகத் தலைவர் முஹம்மத் (ஸல்) குறித்து அவருடைய கருத்து என்ன?... பல்வேறு சந்தர்ப்பங்களிலும், தனது நூல்களிலும், தான் நடத்தி வந்த அரிஜன் பத்திரிகையிலும் அவர் பேசிய.. எழுதியவற்றை... இரத்தினச்சுருக்க சிறப்புத் தலையங்கமாக இங்கே தருகின்றோம்!

ஆசிரியர்
amusavir@gmail.com



## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறித்து...

*முஹம்மத் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் முஸ்லிம்களுக்கு மட்டும் அரிய பொக்கிஷம் அல்ல, மாறாக, அது முழு மனிதகுலத்துக்கும் உரியதாகும்!*


*நபிகள் நாயகத்தின் மாறாத எளிமை, தம்மைப் பெரிதாகக் கருதாமல் சாதாரணமானவராக நடந்துகொள்ளும் உயர்பண்பு, எந்நிலையிலும் வாக்குறுதியைப் பேணிக்காத்த தன்மை, தம் தோழர்கள் மீது அவர் கொண்டிருந்த அழிய அன்பு, அவரது அஞ்சாமை, இறைவன் மீதும் தமது பிரச்சாரப் பணியிலும் அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை ஆகியவைதாம் அவரது வெற்றிக்குக் காரணங்கள்! இவையே உலக சக்திகள் அனைத்தையும் நபிகள் நாயகத்தின் முன்பும் அவர்களின் தோழர்கள் முன்பும் கொண்டு வந்து குவித்தன. எல்லாத் தடைகளையும் வெற்றிகொண்டன. அவரது மகத்தான வெற்றிக்கு இவைதாம் காரணமே தவிர வாள்பலம் அல்ல!*

## தனது மகன் இஸ்லாத்தை ஏற்றது குறித்து...

1936-இல் தனது மகன் இஸ்லாத்தை ஏற்ற செய்தியைக் கேட்டவுடன் காந்தி தனது பத்திரிகையான “ஹரிஜன் - பத்திரிகில் இவ்வாறு எழுதினார்:

*இஸ்லாத்தின் மீது அவன் கொண்ட ஆழ்ந்த பற்றுதான், அவன் அம்மார்க்கத்தை ஏற்க வைத்திருக்கின்றது. இஸ்லாம் ஒரு சத்தியமார்க்கம்! ஆனால், அவன் ஒரு குடிகாரன், விபசார விடுதிகளுக்கு செல்பவன், அதிக வட்டி வாங்குபவன்.. இப்படித்தான் பலரும் அவனை அறிந்திருக்கின்றனர். எனது புதல்வர்களுக்கு அவர்கள் எந்த ஒரு மார்க்கத்தையும் மதித்து நடக்க நான் கற்றுக் கொடுத்திருக்கின்றேன்.அவன் உண்மையாகவே அம்மார்க்கத்தை ஏற்றிருக்கின்றான் என்று கூறினால், அதற்கு என்புறத்திலிருந்து எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால், ஹரிலாலைக் குறித்து எனது இஸ்லாமிய நண்பர்கள்,இவ்வாறாக அறிந்து நம்பினால், அவனை புறக்கணிக்க வேண்டும். ஆனால், அவனது இந்த தழுவல் மனப்பூர்வமான உண்மையான செயல்எனில், சமுதாயத்துக்கு அதனை பயனுள்ளதாகக் கருத வேண்டும்.* (ஆதாரம்:indiavideo.org)

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி



கட்டுரையாளர் 1 : மு.ஆ. அப்துல் முஸவ்விர்

வறுமை

# வறட்சிமிகு வறுமையும் புரட்சிமிகு இஸ்லாமிய தீர்வுகளும்!


**சமநிலையற்ற சமுக மாறுபாடுகளால் நிலவும் வறுமைக்கான காரணிகள்,கோர விளைவுகள்,உலக நியதிகளின் தோல்வி மற்றும் வறுமைக்ககான நிரந்தர தீர்வு குறித்து ஒரு சிறப்புப் பார்வை தருகின்றனர் கட்டுரையாசிரியர்கள் 3 பேர்!**

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் வெறுமைகளாலும் வெற்றிடங்களாலும் நிரப்பப்படும் நிலையே வறுமையாகும். உலக வாழ்வின் சொற்பத்தில் அடிப்படைத் தேவைகள் கூட அவனால் ஈடுசெய்ய முடியாத இயலாமையின் போது அவன் வறுமையின் அகோரத்தில் அங்கலாய்க்கின்றான். ஏனையோரின் பார்வையிலிருந்தும் துாரப்படுத்தப்படுகின்றான். அவனுடைய தன்மானங்கள் தனிமை முத்திரை குத்தி அவனை நிர்க்கதிக்குள்ளாக்குகின்றன.

அது மிகையல்ல!பட்டினி மட்டும் அவனை வாட்டுவதில்லை. அவனின் வாழ்க்கை புஷ்பம் மட்டும் வாடிப் போவதில்லை. மாறாக, அவனின் வாழ்க்கைப் பாத்திரம் முழுவதுமே கருகிப் போகின்றது.

சாதி, மத, இன, மொழி, தேசிய வேறுபாடின்றி ஒரு மனிதன் தான் அடைய வேண்டிய அடிப்படை உரிமைகளான உணவு உடை உறைவிடம் போன்ற வாழ்வாதார அம்சங்களை இழந்தோ அல்லது தேவையான குறைந்தபட்ச அளவோ பெற முடியாமல் இழந்து நிற்கும் நிலையே வறுமை அல்லது ஏழ்மை எனப்படுகின்றது. பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகள் என்றில்லாமல் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் வறுமை மறைமுகமாக கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது, என்பதே உண்மை. சோமாலியா ருவாண்டா போன்ற ஆப்ரிக்க நாடுகளின் பஞ்சப்படங்கள் வெளியாகின்றன என்றால், மேற்கத்திய நாடுகளின் ஏழ்மைப் படங்கள் கவுரமாக வெளியாகின்றன. அவ்வளவுதான் வித்தியாசம்.

பொதுவாக வறுமையை பொருளாதாரம் சம்பந்தப்பட்ட ஒரு அம்சமாகவே நோக்கும் போக்கு காணப்படுவது இயற்கை! ஆனால் உண்மையில் அது சர்வதேச அளவிலான சமூக மற்றும் அரசியல் தொடர்புடைய இயல்புடையதாகவும் நோக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகி இருக்கின்றது. உலகையே அச்சுறுத்தும் ஒரு எமனாக அதனைக் காணாமல் கண்டம் சார்ந்த ஒரு பிரச்னையாகவே பார்ப்பது விடைபெற்று வருகிறது. வறுமை ஒழிப்பு பெரும்பாலான நாடுகளில்




தவிர்க்க முடியாத முக்கிய இலக்காக இருந்து வரும் நிலையில் வறுமைக்கான காரணம் அதன் மீளமுடியா கொடிய விளைவுகள் அதனை அளப்பதற்கான வழிமுறைகள் இவை தொடர்பான வாத-பிரதிவாதங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. வறுமை ஒழிப்பைத் திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்தவதிலும் அளப்பரிய தாக்கத்தைக் கொண்டுள்ளன. எனவே

## இந்த அவலம் ஏன்?

எந்த ஒரு சமுதாயமும் வறுமை - வளமை என கூறு போடப்பட்டாலும் மனிதன் எனும் ஜீவனின் உணர்வுகள் ஒரே ஆற்றல் தன்மை கொண்டவையே. சந்தோஷம்-துக்கம் வெட்கம்-மானம் கருணை-இரக்கம் என அனைத்தையுமே உணரக் கூடியவை. வறுமை ஒரு மனிதனின் வாழ்வை சுடுகாடாக மாற்றி சோதனைகளின் இருப்பிடமாக ஆக்குகின்றதென்றால்









மாறிவரும் அதிவேக உலக மயமாக்கல் - வளர்ச்சி, பொது நிர்வாகம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. வறுமை தரும் வலியும், துன்ப-துயரமும் அது எந்நிலையிலும் விரும்பத்தகாத ஒன்றாகவே கருதப்படுகின்றது.

அனைத்து மதங்களும், பிற தர்மசாசனக் கொள்கைகளும், தத்துவங்களும் வறுமை ஒழிப்பை ஊக்குவித்தே பேசுகின்றன. தனிப்பட்ட ரீதியாகவோ, சமூக பண்பாட்டு ரீதியாகவோ, இந்த வறுமை பாதிப்பை உருவாக்கி பல்வேறுபட்ட சமூகத் தீமைகளுக்கும் அடித்தளமிடுகின்றது.

## வறுமை அளவீடு எவ்வாறு?

பொதுவாக வறுமை நிலை பற்றி பேசப்படும் போதெல்லாம் ஒரு கோடு பற்றிப் பேசுவார்கள். அது தான் வறுமைக் கோடு. ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்வாதார தரத்துக்குக் கீழே வாழும் மக்களை வறுமையில் அல்லது வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் எனலாம்.

இந்த வறுமைக் கோட்டு நிலை மதிப்பிடப்படுவது எப்படி? பொதுவான முறையில் அங்கு இருக்கும் குறிப்பிட்ட அளவு தனிநபர் வருமான அளவின் அடிடிப்படையிலேயே வறுமைக் கோடு வரையப்படுகின்றது.

எனினும் வறுமையின் தீவிரம் உணவு, உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சமூகமதிப்பு, மனித-அரசியல்உரிமைகள் மற்றும் பிற சமூகங்களுடனான தொடர்புகளில் ஏற்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக்கின்றது.

இத்தகு வறுமைநிலையை தீவிர வறுமை நிலை மற்றும் வறுமை நிலை என்று வகைப்படுத்தி அதன் வீச்சை வேறுபடுத்திக்காட்டுவர். இவை மூன்று விதமான அளவுகளில் காட்டப்படும்.

1. நலத் திட்டங்களின் அடிப்படையிலானது
2. வறுமைக் கோட்டை தேர்ந்தெடுத்தல்
3. வறுமையை அடையாளம் காட்டும் அடையாளமானிகளான Poverty Indicators!

இது தவிர மக்களிடையே காணப்படும் சமநீதியற்ற நிலை,வாழ்வின் நிலையற்ற தன்மை, பிரச்சனைகளின் தீவிர வடிவம் மற்றும் இவைகளை அளவிடுதலுக்கான புள்ளி விவரங்கள்.

## வறுமை நிலையும் அதற்கான காரணிகளும்


உலகம் முழுவதும் ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்ட மக்கள் (அதாவது 3பில்லியன்) தினசரி 2 டாலருக்கும் குறைவான வாழ்வாதார நிலைமையில் இருக்கின்றார்கள்.(அதாவது இந்திய ரூபாயில் ஏறக்குறைய 86 ரூபாய்.இலங்கை ரூபா ஏறக்குறைய 180).உலகின் அதிதீவிர வறுமையால் பாதிக்கப்பட்ட 41உலக நாடுகளில் (வாழும் 567மில்லியன் மக்களில்) மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product- GDP) உலகின் மாபெரும் 7 பணக்கார மனிதர்களின் சொத்துக்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு. வறுமை அரக்கன் எந்த அளவுக்கு உலக மக்களை அறியாமையில் தள்ளிவிட்டிருக்கின்றானென்றால் 21-ஆம் நூற்றாண்டின் வாயிலில் நுழைந்த வேளையில் அவர்களில் 1 பில்லியன் பேர் ஒரு புத்தகத்தைப் படிக்கும் அளவுக்கோ அல்லது தங்கள் பெயருக்கான கையொப்பத்தை இடுவதற்குக் கூட தெரியாதவர்களாகவோ இருக்கின்றார்கள்.

குழந்தைகளின் நிலைமையோ சொல்லி மாளாது. உலக குழந்தைகள் 2-இல் ஒருவர் அதாவது ஏறக்குறைய 1 பில்லியன் மழலைகள் வறுமைக் கோட்டில் உழல்கின்றனர். 640 மில்லியன் மழலைகளுக்கு உறங்க உறைவிடம் இல்லை. 400 மில்லியன் இளந்தளிர்களுக்கு நல்ல குடிநீர் கூட கிடைக்காத நிலை. வறுமை காரணமாக 270 மில்லியன் பேருக்கு சுகாதார ஏற்பாடுகள் காணோம். 2003 ஆம் ஆண்டில் மட்டும் 5-ஆவது வயதை அடையும் முன்னரே 10.6 மில்லியன் குழந்தைகள்


கட்டுரையாளர் 2: ஸினூஃபா அன்ஸார்



**உலகம் முழுவதும் வறுமையால் வாடும் மழலைகளின் எண்ணிக்கை 30 மில்லியன்**



# முகப்புக் கட்டுரை



கட்டுரையாளர் 3: முஹம்மத் முஸ்தப்

இறந்துவிட்டிருக்கின்றார்கள். அதாவது சராசரியாக ஒரு நாளைக்கு 29.000 இளம் மொட்டுக்கள்! சமூகத்தின் அரண்களான இவர்கள் பட்டினியால் கருகிப் போவதுவே மிகவும் வேதனைக்குரியது. அடிப்படைகள் அடித்தளங்களின்றி போனால் அவர்களின் எதிர்காலத்திற்கு எது உத்தரவாதம்??

## ஏன் இந்த நிலை...?

வறுமைச் சக்கரத்தில் நாளும் சுழலும் இவர்கள் அதற்கு அச்சாணிகளா?? அவர்கள் உழைக்க நாதியற்று ஆர்வமின்றிய சோம்பேறிகளா? வறுமைதான் எம் வாழ்வின் முடிவு என அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்களா? அல்லது வறுமை முத்திரை குத்தப்பட்டவர்கள் நாம் மட்டும் தான் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களா?? இல்லை ....மறு புறம்!

அவர்களிடம் வாக்குகள் பெற்று ஆட்சிக்கட்டிலில் வீற்றிருக்கும் அரசியல்வாதிகளா? உன்னத வளர்ச்சி நிலைக்கு அவர்களை இட்டுச் செல்லும் தாத்பர்ய அம்சங்களை விட்டும் அவர்களை பராமுகமாக்கி வைக்கும் கொள்கை கோட்பாடுகளையும் சட்டங்களையும் உருவாக்கிக் கொண்ட மக்கள் அரசாங்கங்களா? உண்மையில் People are not useless, But they Used less. அதாவது, மக்கள் பயனற்றவர்களல்லர், மாறாக, அவர்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுபவர்கள்.

இந்த காரணங்களில் எவை என்பது ஒரு புறம் இருப்பினும், உண்மைக் காரணிகள் பற்றி உலகம் அலசுவது குறைவே என்பதுதான் இரகசியமான உண்மை. உலகமயமாக்கலும் அது சார்ந்த முறைகளும், முடிவுகளும் முன்னர் காட்டிய கனவுக்காட்சிகள், வறுமையை வளர்க்கச் செய்தனவே தவிர, ஒழிக்க முடியவில்லை என்பதே சரி!

ஏனெனில், பணக்கார மேல்தட்டு வர்க்கம் இத்தகைய அம்சங்களை வளப்படுத்துவது தங்கள் வளத்துக்காகவே, என்பதை வறுமையின் அபரிமித வளர்ச்சி கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது.பன்நாட்டு நிறுவனங்கள்-கழகங்கள் மற்றும் ஆதாயம் தேடும் சுயநல அதிகாரவர்க்கம் ஆகியனதான் பலன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய புறஆளுமைத் தாக்குதல்களினால் ஏழை நாடுகளுக்கும் அவை சார்ந்த அரசுகளும் கைபிசைந்து நிற்க வேண்டிய நிலை. இதனால் கோடோனுகோடி ஏழைமக்களின் நாடிகளில் கூட நீர் அற்றுப்போய்,உதரங்கள் நாளும் பசியால் வாடி அவர்கள் பரம ஏழைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றனர்.

இனி, வறுமையின் யதார்த்த நிலையும், அது சார்ந்த காரணிகளும் தீர்வுக்கான உண்மை வடிவை சரியாகக் கணிக்கும் வகையில் அறியப்படவில்லை. இது குறித்து இனி வரும் பக்கங்களில் அலசுவோம்.

## வறுமை நிலையின் யதார்த்தம்


ஒருபுறம் உலகம் தாராளமயமாக்க வான் வெளியில் மின்னுவது போல் தெரிய, மறுபுறம் பொருளாதார மந்தநிலையை நோக்கி அது மண்டியிட்டுக் கொண்டிருக்கிறது.இதன் கோர விளைவாக உலகில் வறுமை நிலையை எட்டும் மக்கள் எண்ணிக்கை மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதேபோல் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஏழைகள் அதன் எதிர்ப்பதமாக... அவனியில்...

## வாழ்வமைப்பின் சரிப்பாடுகள்

உலக வங்கியும் (world Bank) பன்னாட்டு நிதியமும் (International Monetay Fund-IMF) வறுமை நீக்க ஏழை அரசுகள் போடும் திட்டங்களுக்கு உதவ பல்வேறு நிபந்தனைகளுடன் பணத்தை இறைக்கின்றன. இந்த நிபந்தனைகள், திட்டங்களினால் பயன்பெற வேண்டிய ஏழைகளின் அடிமடியிலேயே கைவைப்பதுதான் கொடுமை...! விளைவு...!

கல்வி, சுகாதாரம் மற்றும் இதர அத்தியாவசிய சமூகத் தேவைகள் உலகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சரிப்பாடுகளுடன் இருக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகின்றன.இதனால் வளரும் ஏழைநாட்டு அரசுகள் சர்வதேச பணக்கார பொருளாதார முதலைகளுக்காக தங்கள் சந்தைகளை திறந்து விடவேண்டிய கட்டாயம். ஆற்றல்மிகு தொழில்வள நாடுகளுடன் அவை தங்கள் பொருளாதார நிலையை போட்டி போடவைக்க வேண்டிய நிலை!!


எனவே தங்கள் நாட்டில் முதலீடுகளை ஈர்க்க வேண்டி ஏழை நாடுகள் சராசரி கூலியை விடவும் குறைந்த கூலியை வாங்கும், அத்தியாவசியத் தேவைகளின் அடிமட்ட நிலைக்கு அடிபணிந்து பணியாற்றும்... மக்களையே பணியமர்த்தும் கையாலாகாத




"மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒரு வழக்குரைஞராக இருந்து, நீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் போராடுகிறேன்."

– அமெரிக்க ஜனாதிபதிக்காகப் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா

**36.5 மில்லியன்** வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை






நிலைக்குத் தள்ளப்படுகின்றன.இது வறுமையை மேலும் வளர்த்து சமூகத்தில் ஒரு சமநிலையற்ற போக்கை உருவாக்கி விடுகின்றது. உலகம் எனும் உடலின் முதுகெலும்பாக ஒரு அம்சத்தை முன்னிருத்தி அதையே தாராளமயமாக்கல் என்று புகழ்ந்து கொண்டிருக்கின்றோம்.இதன் ஒட்டுமொத்த பயனாக வரலாறு காணாத வணிக விதி முறைகளை ஏழைநாடுகள் அமல்படுத்த வேண்டியிருக்கின்றது.

## உலகத்தில் உலா வரும் வறுமை


ஏழை நாடுகள்தாம் வறுமையில் வாடுகின்றன என்றில்லை. பணக்கார வளர்நத அமெரிக்கா முதலிய நாடுகளிலும் ஏழை பணக்கார விகிதங்களுக்கிடையிலான ஒரு மாபெரும் இடைவெளியைக் குறைக்க அந்நாட்டு தாராள அரசாங்களாலும் முடியவில்லை.

உதாரணமாக அமெரிக்காவில் ஏறக்குறைய 37 மில்லியன் ஏழைகள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அமெரிக்கர்களில் 35 மில்லியன் பேருக்கு சரியான உணவு கிடைப்பதில்லை.30 மில்லியன் அமெரிக்கர்களுக்கு தேவையான இருப்பிடவசதி இல்லை.48 மில்லியன் அமெரிக்கர்களுக்கு உடல்நல காப்புறுதி திட்டம் இல்லை.பணிக்கு சென்று சம்பாதித்தாலும் 17.6 மில்லியன் அமெரிக்கர்கள் தமது குடும்பத்துக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலை.!

அமெரிக்க ஜனாதிபதிக்காகப் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் *பராக் ஒபாமா* கூட, தனது தேர்தல் முழக்கமாக இவ்வாறு கூறுகின்றார்: *'சிக்காகோவின் தெருக்களில் வேலையற்றோரின் வேலைவாய்ப்புக்காகவும் நம்பிக்கையிழந்து நிற்போரின் புதிய விடியலுக்காகவும் போராடும் களத்தில் நிற்பவன் நான்!மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒரு வழக்குரைஞராக இருந்து, நீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் போராடுகிறேன். 'இல்லினாய்ஸ்- பகுதியில் வாழும் குடும்பங்களுக்காக இதே நோக்கத்துக்காக பத்து வருடங்களாகப் போராடுகின்றேன். அதனால்தான் ஜனாதிபதி வேட்பாளராக இன்று களத்தில் நான்.., ஆம்! பசி போக்க- வாய்ப்பைப் பெற-தாகம் தீர்க்க-சமத்துவம் ஆட்கொள்ள கனவு காணும் அமெரிக்காவை முன்னெடுக்க..,கனவைநனவாக்க...!* (டெஸ்மாயின்ஸ் கூட்டம், 10-11-2007)

பாருங்கள்!வல்லரசு என மார்தட்டிக்கொள்ளும் ஒரு நாட்டின் ஜனாதிபதி வேட்பாளர்கூட வறுமையயைப் பற்றி முழங்க வேண்டிய நிலை.!


உலகமயமாக்கலின் புதுப்புது விதிமுறைகள்,சர்வதேச அரசியல் மாற்றங்கள்,இன்ன பிற அம்சங்கள் ஏழை நாடுகளின் உள்நாட்டுத் தேவைகளை மேற்கத்திய சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நடைபோட வைத்துவிட்டன. வரலாற்று ரீதியாகப் பார்த்தால், அரசியலும் ஆட்சிக்கட்டிலும், சுயநல ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களின் உபயத்தால் வறுமையையும், சார்ந்திருக்கும் நிலையையும் மேலும் வளர்த்து விட்டன. இதனால் போர்களும் பகைமையும் பெருகி, நாடுகளுக்கிடையே பனிப்போர்கள் பெருகின. இவையனைத்தும் பொருளாதார, வணிகரீதியாக அமைந்ததுதான் கொடுமை. திறந்தவெளி வணிகம்-











Free Trade போன்ற கவர்ச்சி முழக்கங்களும் ஆதிக்கவர்க்க மூலதனத்தை விதித்து வறுமையை மேலும் வாட்டச் செய்தன. இதுதான் இன்றும் தொடர்கின்றது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், இந்த தலைப்பில் நாம் விவாதித்த வறுமை ஒரு பொருளாதார பிரச்னை மட்டுமல்ல, மாறாக, அரசியல்-சமூக பிரச்னையும் கூட என்பது வெள்ளிடை மலை!

### ஊழல் பெருகுது... வறுமை வளருது...!

பொதுவாக, ஏழைநாடுகளுக்கு உதவ பணக்கார நாடுகள் போடும் தலையாய நிபந்தனை, அவை தம் நாட்டிலிருந்து ஊழலை இல்லாதொழிக்க வேண்டும் என்பதே!ஆனால், அந்த ஏழை நாடுகளுக்கு அவை வழங்கும் நிதியுதவித் திட்டக்கொள்கைகளே பெரும்பாலும் ஊழலில் சிக்கி பரிதவிக்கின்றன என்பதை எங்கு சொல்வது?அதுமட்டுமல்ல, வறுமை போக்க அவை கூறும் பொருளாதார சீர்திருத்தங்கள்கூட பிரச்னைகளைப் பெருக்கி நிலைமையை மோசமாக்குகின்றன. உண்மைதான்...!வறுமை ஒழிக்க... வளரும் நாடுகளின் பிரச்னைப் பட்டியலில் ஊழலும் இருக்க வேண்டியதுதான்... ஆனால்,அதேவேளை...அவற்றுக்கு உதவும் வளர்ந்த நாடுகளின் கொள்கைப் பட்டியலில் ஊழலற்ற செயல்பாடும் அதே முக்கியத்துவம் பெற வேண்டுமே...!

### வறுமை ஒழிக்க அந்நிய உதவிகள்...அவை பெற்ற ஆர்ப்பாட்ட தோல்விகள்..!

1970 வரை...உலகின் பணக்கார நாடுகள் பலவும் தமது சராசரி தேசிய வருமானத்தில் 0.7% சர்வதேச வளர்ச்சி நிதிக்காக வழங்க முடிவு செய்தன.இதன் முக்கிய குறிக்கோள்...வறுமை ஒழிப்பு...! அன்று முதல்,இந்த கட்டுரை அச்சேறும் வரை பில்லியன் கணக்கில் நிதி வழங்கப்பட்டு வந்தாலும்,பணக்கார நாடுகள் தம் 'வறுமை ஒழிப்பு' இலக்கை எட்டவில்லை!

உதாரணத்துக்கு டாலர் பணமதிப்பு அளவில் இந்த நன்கொடையாளர்களின் பட்டியலில் முதலிடத்தில் நிற்கின்றது அமெரிக்கா!அதேவேளை, நிதியுதவி வழங்கப்பட்டு ஏழைநாடுகளின் வறுமை ஒழிப்புக்கான 0.7% நிதியுதவி இலக்கைப் பூர்த்தி செய்து, வறுமை ஒழிப்புக் கோஷத்தை செயல்படுத்திக் காட்டிய நாடுகளின் பட்டியலில் கடைசியில் இருக்கின்றது.

### வறுமை ஒழிப்பின் அடித்தளமா, ஐ.நா. சபை?

செப்டம்பர் 2005-இல் நடைபெற்ற 'உலக மாநாடு' மில்லினிய முழக்கங்கள் பற்றி விவாதித்தது. இம்மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வந்த ஒரு 'புறதீர்மானம்' அனைத்து உறுப்பு நாடுகளாலும் மறு விவாதம் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. ஆனால், விவாதத்தின்போது, மில்லினிய முழக்கங்களில் ஒன்றான '2015-க்குள் வறுமை ஒழிப்பு' என்பதை மறுபரிசீலனை செய்யக் கோரி பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இதனால் அந்த தீர்மானம் வலுவிழந்தது.

### மக்கள் தொகை காரணமா?

வறுமைக்கான ஆணிவேராகப் பல்வேறு தரப்பும் கூறுவது மக்கள்தொகைப் பெருக்கத்தை! அதாவது, ஒரு நாட்டில் பொருளாதார கட்டமைப்பு வசதிகளை அடிப்படையாக வைத்து மக்கள் தொகை இருக்க வேண்டும். அப்போதுதான்,நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்க முடியும் என்று நவீன நாகரிக சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். அதற்கு வளம் பெருகி,மக்கள் குறைந்து காணப்படும் பல நாடுகளையும் அவை சார்ந்த திட்டங்களையும் உதாரணம் காட்டுகின்றனர்.

ஆனால் மக்கள் தொகை அதிகம் கொண்டு வல்லரசுப் பாதையில் வலம் வர பாதை அமைத்துக் கொண்டிருக்கும் சீனாவையும்,இந்தியாவையும் வசதியாக மறந்துவிடுகின்றன. அதற்காக இந்நாடுகளில், வறுமை அறவே இல்லை என்று சொல்லிட முடியாது.இருப்பினும் வளர்ந்த நாடுகள் அடைந்திருக்கும் ஏழை-பணக்கார விகிதாச்சார இடைவெளியின் தாக்கத்தைவிட இந்நாடுகளில் வறுமை தாண்டவமாடுவது ஒன்றும் குறிப்பிடத்தக்க அம்சமல்ல!

இன்னொருபுறம், மக்கள் தொகைப் பெருக்கம் அந்நாட்டின் மனித சக்தி வளர்ச்சிக்குத் தூண்டுகோல்... அதன் மூலம் பெறப்படும் மூலதன வளர்ச்சி வளரும் அடுத்த தலைமுறைக்கு ஊட்டச்சத்தாக அமையும். ஒரே நிபந்தனை அந்த மனித ஆற்றல் சரியான வழியில், சரியான முறையில் பயன்படுத்தப்படுவது அவசியம்!

எனவே, ஆற்றல் தன்மையை உன்னத பாதையில் செலுத்தி வளம் காண முயலாமல், ஊழல் உள்ளிட்ட சமூகத் தீமைகளை ஆரத்தழுவிவிட்டு மக்கள் தொகையை காரணம் காட்டுவது தகுமா?

## வறுமை


# காரணிகளும் தீர்வுகளும்

# ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம்!


இனி,
ஏன் வறுமை நிலை? –
ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்

வரையறுக்கப்பட்ட வாழ்வின் முழு வடிவமே இஸ்லாமிய வாழ்க்கை நெறியாகும். அது மனிதனைவிட்டு தூரமாகும்போது அவன் வீழ்ச்சிக்கான காரணிகள் அவனை சூழத் துவங்கும். அவற்றில் ஒன்றே வறுமை!

வறுமையை போக்க முதலில் ஒரு சமூகம் மத ரீதியாகவே தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் சீர்படுத்தப்படும் சிறந்த பாசறை அவன் ஏற்றுப் போற்றுகின்ற உண்மை மதமே!!. மத அடிப்படையிலேயே வறுமை போன்ற சமூக வீழ்ச்சிக்கான காரணிகள்







எவ்வாறு உருவாகின்றதென்றும் அவைகளுக்கான தீர்வுகள் யாதென்றும் அடையாளம் பெற முடியும். இவ்வரிசையில் அனைத்து வாழ்வியல் துறைகளிலும் மக்களை உய்விக்க வந்த ஒரு வாழ்வியல் நெறி வழிகாட்டுகின்றது. அதுவே இஸ்லாம்!பூரண வாழ்க்கையின் வரைகோல் எனின் அது இஸ்லாமே!

இஸ்லாம் காட்டித் தந்த வாழ்க்கை வழிப்பாதைகள் அவை அழகிய தீர்வுகள்,ஆழிய சிந்தனைகளை உள்ளடக்கியிருப்பது என்பது வெள்ளிடை மலையாகும்.

அத்தயை வாழ்க்கை நெறியான இஸ்லாத்தில் வறுமை பற்றிய கண்ணோட்டம் என்ன? அது எவ்வாறு வறுமையை நீக்கி மனித சமூகத்தை மலர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் திட்டங்களை முன் வைக்கின்றது என்பதைக் காண்போமா?

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வறுமைக்கான காரணிகளை இவ்வாறு பட்டியலிட முடியும்.

1. தனது வாழ்க்கை ரதம் பயணிக்கக் கூடிய... தான் மேற்கொண்ட தொழில் முறைகளில் மனிதன் மனத்தூய்மையுடன் ஈடுபடல் வேண்டும். மாறாக, இதில் உருவாகும் வஞ்சனையும், மோசடியும் அவனது முழு வாழ்க்கையையுமே திசை திருப்பி வறுமைக் காயங்களை உருவாக்கச் செய்துவிடும். அவன் வாழ்க்கை முழுவதும் அதன் வலி நீளும்.

உதாரணமாக, தாம் மேற்கொண்ட வணிகத்தின் அளவைகளிலும் நிலுவைகளிலும் ஒரு சமூகம் மோசடி செய்கின்றதெனில், அதன் விளைவு பஞ்சம்,பட்டினி,வறுமை என இஸ்லாம் கூறுகின்றது.

இதனையே ஈருலக நாயகர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: *எந்தவொருசமூகம் அளவை-நிலுவை குறித்து மோசடி செய்கின்றதோ, அந்த சமூகம் பஞ்சம்,வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாமல் அரசுக் கொடுமை ஆகியவற்றால் பீடிக்கப்படும். (ஆதாரம்: அஹ்மத், இப்னுமாஜா)*

2. ஒரு சமூகத்தில் மிகுந்து விடுகின்ற மானக்கேடான செயல்கள்..! இவை ஆரோக்கியமான ஒரு சமூகவாழ்வை சின்னாபின்னமாக்கி வீழ்ச்சியுறச் செய்துவிடுகின்றன. அவற்றில் விபச்சாரமும், ஓரினச்சேர்க்கையும் அடக்கம். இவை சமூகப் பிறழ்வுகளின் நுழைவாயில்களை திறந்துவிடுகின்றன. அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் அருளினார்கள்: *ஒரு சமூகத்தில் மானக்கேடான (விபச்சாரம் போன்ற) பாவங்கள் பகிரங்கமாக நடைபெறுகின்ற ஒன்றாக மாறிவிட்டால், அவர்களது மூதாதையர்களிடம் காணப்படாத பயங்கர நோய்கள் அவர்களுக்கு மத்தியில் தோன்றி பரவலாகும்.*

இந்த நபிமொழி நோயைப் பற்றிக் குறிப்பிட்டாலும், நிவாரணத்துக்காக மாபெரும் செல்வத்தை இறைக்க வேண்டியிருப்பதால், வறுமை அந்த சமூகம் நோக்கி விரைந்து படையெடுக்கும்.

3.ஒரு நாட்டின் தலைமைத்துவத்திலிருக்கக் கூடிய தலைவர்கள் சம்பந்தப்பட்டது, பிறிதொரு காரணியாகும். மக்கள் சம்பந்தப்பட்ட ஆட்சியாளர்கள் ஆற்றும் சேவைகள், வழங்கும் தீர்ப்புக்கள், கருதும் நலன்கள் போன்றவற்றில் பாதிப்புக்கள் ஏற்படும்போது அவற்றின் விளைவுகள் அவர்களை துன்பத்தின்பால் இட்டுச்செல்லும்.

**அனைத்து வாழ்வியல் துறைகளிலும் மக்களை உய்விக்க வந்த ஒரு வாழ்வியல் நெறி வழிகாட்டுகின்றது.!**

இதுபற்றி, முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

*எந்தவொரு சமூகத்தின் தலைவர்கள் அல்லாஹ் இறக்கியருளியதைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அந்த சமூகத்தின் மீது அவர்களது எதிரிகளை அல்லாஹ் ஆதிக்கம் செலுத்தச் செய்வான். அவர்கள், அவர்களிடமுள்ள சொத்து செல்வங்களையெல்லாம் அழித்துவிடுவார்கள். (ஆதாரம்:அஹ்மத், இப்னுமாஜா).*

இன்றைய காலகட்டங்களில் சர்வ சாதாரணமாக நடக்கும் இவைகள் யாவும் வறுமையை சுழற்றக்கூடிய சக்கரங்களே ஆகும்.

4.வட்டி! எந்தவொரு சமூகத்தில் வட்டி எனும் பொருளாதாரச் சுரண்டல் மிகைத்துவிடுகின்றதோ, அங்கு வறுமையின் சாயல் சிறிது சிறிதாகத் தோன்றி இறுதியில் சமூகத்தையே நாசப்படுத்திவிடும்.

குறிப்பிட்ட ஒரே இடத்தில் செல்வம் மிகைத்து நிற்பதாலும், அதில் உழலும் ஏழைகள் தம் வாழ்வையே அடகு வைத்து திணறுவதாலும், வட்டியின் கொடுமை வறுமைக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கின்றது.


11-ஆம் பக்கம் பார்க்க..



The Sydney Morning Herald

EXTENT OF CRISIS REVEALED

# 20,000 die each day





மாணவியர்



மாணவிக்கு சான்றிதழ்



நெறிமுறை போதனைகளில் பயின்ற மாணவியர்



புதிதாக இஸ்லாத்தை தழுவிய சகோதரர்கள் சுற்றுலாவில் இஸ்லாமிய அழைப்புப் பணியாளர் அமீர் ஹஸனுடன்...

## கோடைக்கால பயிற்சி நெறிமுறை போதனைகளுக்கு ஒரு குளுமை விழா!

மகளிருக்கு மார்க்க பயிற்சி நெறிமுறைகள் போதிக்கும் வகுப்புக்கள் இஸ்லாமிய நிலையம்- IPC மகளிர் பிரிவு,ரவ்தா-வின் பாடசாலைத்துறையினரால் தொடர்ந்து நடத்தி வரப்படுகின்றது. அவ்வாறே கோடைக்கால வகுப்புக்களும் இரண்டு மாத கால பயிற்சி நெறியாக நடை பெற்றது.

இதில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த,பல மொழிகள் பேசும் 185 மாணவியர் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குரிய பிரத்யேக கவுரவ விழா,கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி ரவ்தா, IPC அலுவலக செவியரங்கத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. புகழனைத்தும் இறைவனுக்கே!

பாடசாலைத்துறை தலைவி *லதீ∴பா ஸாஃத்* தலைமையில் நடந்த இவ்விழாவில் திருக் குர்ஆன் ஓதுகலை-ஆரம்ப நிலை,முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாறு,இஸ்லாமியக் கோட்பாடு,நபிமொழி நாற்பது, இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்,நேர்வழி பெற்ற கலீ∴பாக்கள் நால்வர்,திருக் குர்ஆன் அத்தியாயம் 25, ∴புர்கான் ஓதுதல் ஆகிய பாடங்களை சிறப்பான முறையில் நிறைவு செய்து, தமிழ் சிங்கள சகோதரிகளும் இன்னபிற மொழி சகோதரிகளும் பெரும் பயன்களை ஈட்டிக் கொண்டனர். வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்த தமிழ் மற்றும் சிங்கள சகோதரிகளுக்கு சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியை சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்துவதில் பாடசாலைத் துறை செயலாளர் சகோதரி *ஷய்மா தியாப்* மற்றும் ரவ்தா மகளிர் பிரிவு இஸ்லாமிய தமிழ் மற்றும் சிங்கள அழைப்புப்பணி சகோதரிகள் *ஷர்∴புன்னிஸா ∴பாரூக்,பர்ஸனா ர∴பீக்,ஸினூபா அன்ஸார்,ஸீல்∴பிகா மன்சூர்* ஆகியோர் பெரும் பங்காற்றினர்.


மகளிர் கல்வியை வலுப்பெறச் செய்து வாழ்வை மேலோங்கச் செய்வதில் இஸ்லாமிய அழைப்பு பணியகங்கள் பெரிதும் செயலாற்றுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்!

*ரவ்தாவிலிருந்து* ராபிதா

இஸ்லாமிய நிலையம், தலைமையகத்திலிருந்து புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய தமிழ் சகோதரர்கள் குவைத் கோளரங்கத்துக்கு சுற்றுலா சென்றனர். அறிவியலின் உன்னத ஆச்சர்ய அம்சங்களுக்குப் பின்புலமாக இறைவல்லமை இருப்பதை அழைப்புப்பணி சகோதரர் *அமீர் ஹஸன் நைனார்* திருக் குர்ஆன் வசனங்கள் மேற்கோள்காட்டி விளக்கினார்

*கோளரங்கத்திலிருந்து* அப்துல்லாஹ்

## குறுக்கெழுத்துப் போட்டி ஜூலை மாத வெற்றியாளர்கள்!




வசந்தம் மூன்றாவது குறுக்கெழுத்துப் போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சி IPC-இல் நடைபெற்றது.

முதலாவது பரிசு (நோக்கியா செல்லிடைப்பேசி) சகோதரர் கமருஸ் ஸமான்(மேலே) பெற்றார்.

2-ஆவது பரிசு (கைக்கடிகாரம்) பெற்ற சகோதரர் K. பிரேம் ஆனந்த் (கீழே).

3-ஆவது பரிசு (டீ செட்) பெற்றவர் ஸால்மியா-வைச் சேர்ந்த சகோதரி ராஜலட்சுமி (∴பாத்திமா)



### ஆகஸ்ட் மாத குறுக்கெழுத்துப் போட்டி வெற்றியாளர்கள்

முதல் பரிசு
P. குணசீலன் - மிர்காப்
நோக்கியா செல்லிடைப்பேசி

2-ஆவது பரிசு
A. முஹம்மத் ஹாஜி - ருமைதியா
கைக்கடிகாரம்

3-ஆவது பரிசு
கஜேந்தினி (சப்னா) - சால்மியா
டீ செட்

செப்டம்பர் மாத வெற்றியாளர்கள் விவரம் அடுத்த இதழில் வெளியாகும். இறை நாடினால்..!

*தலைமையகத்திலிருந்து* இளவேனில்





9-ஆம் பக்க தொடர்ச்சி...

## தீர்வுப் பாதையின் திறவுகோல் யாது??

ஒரு சீனப் பழமொழியுண்டு. ஒரு மனிதனுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் அவன் அந்த நாள் மட்டும் உண்ணுவான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தந்தால் அவன் ஒவ்வொரு நாளும் மீன் உண்ண முடியும். இது உணர்த்துவது எது? மனிதன் கரமேந்திக் கேட்கும் நிலை அகற்றப்பட்டு அவன் யாதேனும் சுய தொழிலில் ஈடுபடல் வேண்டும். அது அதிக அல்லது சிறியளவில் பணமுதல்களை ஈன்று தரும் தொழிலாயினும் சரியே!!

நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நடைபெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம். *யாசகம் கேட்டு வந்த ஒரு மனிதரின் வீட்டில் இருந்து ஒரு பொருள் கொண்டு வரப்பட்டு அது விற்கப்பட்டது. பிறகு அதன் மூலம் ஒரு கோடாரி வாங்கப்பட்டு அம்மனிதரை விறகு வெட்டி சம்பாதிக்குமாறு பணிக்கப்பட்டது.வறுமைப் புற்றின் நீக்கமாக மிளிரும் வரலாற்றின் இரத்தினச் சுருக்கம்* இது! மேலும் வறுமையை எதிர் கொள்வதற்கான பல பயிற்சிகளை முயற்சிகளை இம்மை மறுமை இலாப நோக்கம் கருதி இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ளது. அதன்படி, மனிதன் தனது வாழ்வைச் செப்பனிடும்போது தலைசிறந்த முடிவுகளை,விளைவுகளைக் கண்டு கொள்வான்.

## திறவுகோல்களின் அம்சங்கள்

1.இஸ்லாமிய மாளிகையின் தூண்களில் ஒன்றான ஜகாத் எனும் ஏழை வரிப்பணம்.இது பணத்தை சுழற்சி முறைப் படுத்துகின்றது. இறைச் சட்டத்தின் படி பணச்செல்வங்கள் பணக்காரக் கரங்களிலிருந்து எடுக்கப்பட்டு வறியோர்க்கும், தேவையுடையோர்க்கும் விநியோகிக்கப்பட வேண்டும். இது ஏன்?திருக் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது. *ஏனெனில், அது உங்களிலுள்ள செல்வந்தர்களுக்கிடையே மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காக!(59:6)*

கருணைகளின் முழு வடிவமும் அனைத்தின் அதிபதியும் தலைசிறந்த நிர்வாகியுமான இறைவனின் அடிமையே மனிதன். இறைவன் வரையும் வரம்புகளிலேயே அவன் வாழ்க்கையை வரையக் கடமைப்பட்டுள்ளான். தனது

17-ஆம் பக்கம் பார்க்க..

# ரமளான் மாதத்தில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகள்!

ஆக்கம் ஷகீரா பஷீர்


*இறையச்சத்தை அதிகப்படுத்தி நற்செயல்களை மெருகூட்டும் புனிதமிகு மாதம் ரமளான்! இப்புனித மாதத்தில்தான் இஸ்லாமிய வரலாற்றின் பல மகத்தான நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. எனவே ரமளான் என்பது வெறுமனே நித்திரையிலும் கேலிக்கூத்துக்களிலும் பொழுதைப் போக்குவதற்கு அல்ல என்பதையே அவை எமக்கு உணர்த்துகின்றன.*

*ரமளானை சிறப்பித்து வழியனுப்புகின்ற போது ஒரு சிறந்த மானுடனாக எம்மை புடம் போட்ட தங்கம் போல் மாற்ற இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் துணைபுரியும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை!இதன் தலையாய நிகழ்வாக,*

*உலக மக்களுக்கோர் நல்லுரையாம் புனித குர்ஆன் இந்த ரமளான் மாதத்தில்தான் இறக்கியருளப்பட்டது.*


| ஹிஜ்ரி ரமளான் | நிகழ்வுகள் |
|---|---|
| 2 - 17 | அசத்தியத்துக்கு எதிரான சத்தியநெறியின் மாபெரும் அறப்போர் பத்ரு யுத்தம். |
| 2 - 10 | ஜகாத்துல் ஃபித்ர் கடமையாக்கப்பட்டது. |
| 2 | நோன்புப் பெருநாள் தொழுகை கடமையாக்கப்பட்டது. |
| 9 | ஹிஜ்ரி 5-இல் நடைபெற்ற அஹ்ஸாப் யுத்தத்திற்கான ஏற்பாடுகள் ரமளான் 9ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது. |
| 8 - 07 | ஃபத்ஹுமக்கா எனப்படும் மக்கா வெற்றி நடைபெற்றது. |
| 21 | தபூக் யுத்தம் நடைபெற்றது. ரோமர்களுடன் நடந்த போரில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். |
| 2 - 08 | ஹிம்யர் கோத்திரத்துக்காரர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். |
| 40 - 10 | அலீ (ரலி) அவர்கள் கவாரிஜ்களால் கொல்லப்பட்டார்கள். |
| 91 - 19 | உமையா கலீபா வலீதின் காலத்தில் முஸ்லிம்கள் ஸ்பெயினை வெற்றி கொண்டது. இப்படையெடுப்பின் போது தாரிக் பின் ஸியாத் ஸ்பெயின் கரையை அடைந்த பின் தாம் வந்த கப்பல்களை தீக்கிரையாக்கி விட்டு வெற்றி அல்லது வீரமரணம் என்று கூறிவிட்டு போர்க்களம் புகுந்தார். |
| | ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு தடவை திருக்குர்ஆனை ஓதிக்காட்டுவார். |
| 1 | தொழுகைக்கு அழைக்கப்படும் அழைப்பு "அதான்" கடமையாக்கப்பட்டது. |
| 19 | நபித்துவத்தின் 10ஆம் வருடம் ரமளான் 19 நபி (ஸல்) அவர்களுக்கு உற்ற துணையாக இருந்த அவர்களது சிறிய தந்தை அபூதாலிப் மரணம் அடைந்தார். |
| 57 - 10 | ஆயிஷா (ரலி) அவர்கள் மரணமடைந்தார்கள். |
| 309 | பாத்திமா வம்ச கலீஃபா முஇஸ்ஸினுடைய கட்டளையின்படி கட்டப்பெற்ற பள்ளிவாசலான அல் அஸ்ஹர் பிற்காலத்தில் உலகத்திலேயே மிகப் பெரிய இஸ்லாமியப் பல்கலைக்கழகமாக மாறியது. |
| 524 - 29 | சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி சிலுவை யுத்தத்தில் கிறிஸ்தவர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். |
| | ஜன்ஜலூத் என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் வெல்ல முடியாது என்ற கூறப்பட்ட தார்த்தாரியர்களை முஸ்லிம்கள் தோற்கடித்தது புனித ரமளானில் தான்! |
| 4 | உம்முல்-மஸாகீன் "ஏழைகளின் தாய்" என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட அன்னை ஜைனப் பின்த் ஃகஸீமாஹ் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் மணமுடித்தார்கள். |
| 132 | அப்துல்லா இப்னு அப்பாஸ் டமஸ்குஸைக் கைப்பற்றினார். இதன் மூலம் உமையாக்களின் ஆட்சி முடிவடைந்தது. |
| 42 | அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் மிஸ்ர் தேசத்தில் மரணமடைந்தார். |















# அதிசயங்களுக்கு ஆதாரம் யார்?

## உலகில் காணும் எணணிலடங்கா ஆச்சர்யங்களுக்குப் பின்புலமாக வீற்றிருப்பது யார்? நன்றிக்கு உரித்தான நாயகன் யார்?

ஆக்கம் : முஹம்மத் ஃபைஸல்



இறைவனின் மகிமையை, மகத்துவத்தை அவனது அளப்பபரிய ஆற்றலை, வல்லமையை மனிதன் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. எனவேதான், அவன் அலட்சியமாக இருந்து வருகின்றான்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் - என்று வாழ்கின்றான். தன்னை மீறியவன் யார் எனும் கர்வத்தில் வலம் வருகின்றான்.

உலகுக்கு மின்னொளி கொடுத்த அமரிக்க கண்டுபிடிப்பாளரும், தொழிலதிபருமான தாமஸ் ஆல்வா எடிசனைத் தலையில் தூக்கிக் கொண்டாடும் மனிதன், எத்தகைய தூண்டுதலும் இல்லாமல் வண்ணமயமாய் உலகைக் காணும் கண்களுக்கு ஒளி தந்த இறைவனை சாவகாசமாக மறந்துவிடுகின்றான். அவனுக்கு நன்றி செலுத்த முற்படுவதில்லை.

*அல்லாஹ்தான் உங்களைப் படைத்து, கேட்கின்ற மற்றும் பார்க்கின்ற ஆற்றல்களையும் சிந்தித்துணரும் உள்ளங்களையும் உங்களுக்கு வழங்கியுள்ளான். ஆனால் நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகின்றீர்கள்.*
*திருக்குர்ஆன் 67:23*

வறட்சிக்காலங்களில் மழைக்காக வேண்டி பற்பல வேதியியல் மாற்றங்கள் கொண்டு செயற்கை மழை பொழிவிக்க கோடிக்கணக்கில் செலவு செய்கின்றான் மனிதன். ஆனால், செலவேதுமின்றி சுவையான மழைநீரை பொழிவித்து இறந்து கிடக்கும் பூமியை உயிர்ப்பிக்கச் செய்யும் இறைவனின் வல்லமையை வசதியாக மறந்து விடுகின்றான்.

*நீங்கள் பருகும் இந்த நீரை நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? மேகத்திலிருந்து இதனை நீங்கள் பொழியச் செய்தீர்களா? அல்லது அதனைப் பொழியச் செய்தது நாமா? நாம் நாடினால் இதனை உவர்ப்பு நீராக்கிவிட்டிருப்போம் அப்படியிருக்க நீங்கள் ஏன் நன்றி செலுத்துவதில்லை?*
*திருக்குர்ஆன் 56:68-70*

தனது இந்த மழை நீர் அருள் குறித்து திருக் குர்ஆனின் இன்னபிற இடங்களிலும் (27:60) இறைவன் நினைவுபடுத்துகின்றான்.

இத்தகைய வாழ்க்கை வசதிக்கான அத்தியாவசியமானவற்றை வழங்கி எம்மை வாழ வைக்கும் அந்த ஏகனை வணங்காது.. அவன் படைத்தவற்றை வணங்கும் மனிதனை என்னென்று சொல்வது?

### திருக்குர்ஆன் பேசுகின்றது - 7

இன்னும் விண்ணைப் பாருங்கள், எவ்வித ஆதாரமும் இன்றி.. தாங்குதளமும் இன்றி அது எவ்வாறு விரிந்து பறந்து நிற்கின்றது? அதன் விளக்கொளிகளாய் மிளிரும் சந்திரனும் சூரியனும் எவ்வாறு இரவு-பகல் வேளைகளில் மாறி மாறி குறித்த நேரத்தில் விண்ணில் வலம் வருகின்றன. வானத்தை அலங்கரிக்கும் தாரகைகள் எவ்வாறு எத்தகைய மின்சாரமுமின்றி மினுமினுத்துக் கொண்டிருக்கின்றன? கடல்களும் மலைகளும் பல்கோடி ஆண்டுகளாக எவ்வாறு ஒரே சீராக இருந்து கொண்டிருக்கின்றன? இவையனைத்துக்கும் பின்னால் இயக்குகின்ற ஒரு ஆற்றல் இருப்பதை மனிதன் உணர்ந்தானா? அப்படி உணர்ந்திருந்தாலும் அந்த ஆற்றல் ஏகமா? அல்லது பலதா? என்று சிந்தித்திருக்கின்றானா?..

நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்டதாக அந்த இறைஆற்றல் இருப்பின் இந்த ஒழுங்கமைப்பில் சீர்குலைவுகள் ஏற்பட்டிருக்கும். இதனை மனித பகுத்தறிவு உணர்ந்திருப்பினும் ஒரு வீம்புக்காக ஒரு சிலர் அதனை ஏற்க மறுத்து மமதையில் வீழ்ந்து கிடக்கின்றார்கள்.

இதனைக் குறித்துத் தான், அவனது வேதமாகிய நான் மனிதர்களைப் பலமுறை எச்சரித்துக் கொண்டிருக்கின்றேன்.

*வானத்திலும் பூமியிலும் அல்லாஹ் ஒருவனைத் தவிர மற்ற கடவுளர்களும் இருந்திருந்தால் அவ்விரண்டின் ஒழுங்கமைப்பும் சீர்குலைந்து போயிருக்கும்.*
*திருக்குர்ஆன் 21:22*

ஓ, மானுடர்களே! சற்று சிந்தியுங்கள்!! பேரண்ட அமைப்பின் இத்தகைய உன்னத கோட்பாட்டின் பின்புலமாக ஒரே ஒரு இறைவனான அல்லாஹ் சாத்தியமா...? அல்லது பல தெய்வங்களா...? உங்களின் இந்த முடிவில்தான் உங்கள் ஈருலக வெற்றியும் அடங்கியிருக்கின்றது.

அடுத்த இதழில்...
வல்ல இறைவன் நாடினால்...!







*பெரும்பான்மை மதங்களில் இறைவனைப் பற்றிய கருத்தோட்டம் - 3*

*இந்து மதத்தில் இறைவனைப் பற்றிய கண்ணோட்டம்*

# ஒரு தெய்வமா? பல தெய்வமா??

ஆக்கம் டாக்டர். ஜாகிர் நாயக் தமிழில் டாக்டர். ஜாகிர் நாயக்

ஒரு மதத்தை பல தெய்வத்துணை கொண்டு துண்டாடி, தான் விரும்பிய கடவுளை துணைக்கழைக்கலாம் என்ற கொள்கை கொண்ட ஒரு மதம் உண்டெனில், அது இந்து மதமே!! இயல்வன யாவும் இறையுருவே எனும் சித்தாந்தம் இன்றைய நவீனத்தில் இலங்குமா? இயல்பாகுமா?? எது வரையில் கரை காணும்??

இந்து மதம் பொதுவாக பலதெய்வ வழிபாடு கொண்ட மதம். பெரும்பாலான இந்துக்கள் பல கடவுளரை வழிபடுகின்றார்கள். இதன் மூலம் தாங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்களை வழிபடுவதை ஒப்புக்கொள்கின்றார்கள். சில இந்துக்கள் மூன்று கடவுளர் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். மேலும் சிலர் ஆயிரக்கணக்கான கடவுளர் மீதும், இன்னும் சிலர் 33 கோடி கடவுளர் மீதும் நம்பிக்கை கொண்டு தமது பலதெய்வக் கொள்கை வழிபாட்டுக்கு கட்டியம் கூறிக் கொண்டிருக்கன்றார்கள்.

இத்தகைய இந்துக்கள் மத்தியில் ஒரு சிலர், இந்துமதக் கொள்கையை நன்கு அறிந்தவர்கள், வேத-சாஸ்திரங்கள் கூறும் உண்மை கொள்கையை உணர்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் ஏகத்துவக் கொள்கை மீது நம்பிக்கை கொண்டு ஒரே ஒரு தெய்வத்தை மட்டுமே வணங்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லாதவர்கள்!

புலனுணர்வுக்குட்பட்ட இறைகொள்கை பற்றிய கருத்தோட்டத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே காணப்படும் பெரும் வேறுபாடு இதுவே:- அதாவது, இந்து மதம், “இயல்வன யாவும் இறையுருவே”, எனும் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இக்கோட்பாட்டின்படி ஒரு இந்து ஒவ்வொரு பொருளும் இறைதன்மை கொண்டவை, புனிதமானவை.. என்று கருதுகின்றான், அவை உயிருள்ளவையாயினும் சரி.. உயிரற்றவையாயினும்



சரியே..!அதன்படி, மரங்கள் கடவுளே!சந்திர-சூரியன் கடவுளரே! குரங்கும் கடவுள், பாம்பும் கடவுள்! ஏன், மனிதன்கூட கடவுளின் அவதாரமாகக் கருதப்படுகின்றான்!

இதற்கு முற்றிலும் மாறாக, இஸ்லாம் மனிதனையும் அவனைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றையும் இறை படைத்த படைப்பினங்களின் உதாரணமாகக் காணுகின்றது. எனவே, முஸ்லிம்கள் “அனைத்தும் கடவுள்”, என்ற கோட்பாட்டை விட்டு விலகி “அனைத்தும் கடவுளுடையது” என்று நம்புகின்றார்கள். மற்றொரு வார்த்தையில் கூறினால், அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்ட படைப்பினங்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். அதாவது, மரங்களும் கடவுளுடையது, சூரிய-சந்திரனும் கடவுளுடையது, குரங்கும்-பாம்பும் கடவுளுடைய படைப்பினமே என்று நம்புகின்றார்கள்.சுருங்கக் கூறின், பேரண்டமும் அதில் உள்ள ஒவ்வொன்றும் கடவுளுடையது என்று நம்புகின்றார்கள்.

## இறை பற்றிய கருத்தோட்டம்: இந்துவேத நூல்களின் பார்வையில்...!

இந்துமத வேதநூல்களை சரியாக படித்துணர்வதின் மூலம் இந்துமதத்தில் இறை பற்றிய கருத்தோட்டம் என்ன என்பது குறித்து ஒரு தெளிவான முடிவுக்கு நாம் வர முடியும்.

### அ. பகவத் கீதை

இந்துமத வேத நூல்களில் மிகப் பிரபல்யமானது பகவத் கீதை. அதில் காணப்படும் ஒரு வசனத்தை கூர்ந்து கவனியுங்கள்:

எவருடைய அறிவுத்திறம், உலகாயத கோட்பாடுகளினால் சூறையாடப்பட்டுக் கிடக்கின்றதோ, அவர்கள் உண்மையான இறைவனுக்குப் பதிலாக (மனிதப்) படைப்பினங்க(ளை இறைவனாகக் கருதி அவைக)ளிடம் தம்மை சமர்ப்பிக்கின்றனர். தங்கள் மனோ இச்சைப்படியான குறிப்பிட்ட சட்டதிட்டங்களைப் பின்பற்றுகின்றனர். (7:20)

அதாவது உலகாயத கோட்பாட்டைப் பின்பற்றும் மக்கள் உண்மையான இறைவனுக்குப் பதிலாக படைப்பினங்களை வணங்குகின்றனர் என்று கீதை பறைசாற்றுகின்றது.

*இனி, இந்துத்துவ இறைக் கருத்தோட்டம் குறித்து அதன் உபநிடதங்கள் மொழிபவற்றை விளங்குவோம்... அடுத்த இதழில்... வல்ல இறைவன் நாடினால்...!*





# K!W!E 2008 KOREA INTERNATIONAL WOMEN'S INVENTION EXPOSITION

*சர்வதேச அளவில் முஸ்லிம் பெண் விஞ்ஞானிகள் முதலிடம்*

# நிரூபணமாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிஜங்கள்...!

**பெண்ணாயுதமான ஹிஜாப் கொண்டு அவள் தன்னை மறைத்துக் கொண்டு உலகில் அனைத்து விதமான செயற்போர்களிலும் பங்கேற்று வெற்றி வாகை சூடலாம். அது அவளுக்குக் கேடயமேயன்றி கேடல்ல. அவ்வரிசையில் எத்துறையாயினும் சளைப்புக்கள், களைப்புக்கள் அறிவை ஆட்கொள்வதில் இவ்வனியிலே அவளுக்கில்லை! இதோ, நிரூபணமாகிக் கொண்டிருக்கின்றன இன்றைய நிஜங்கள்!**

தாங்கள் சுயவிருப்புடன் அணியக்கூடிய ஹிஜாபுக்காக உரிமைப் போராட்டம் நடத்தி வரும் மேற்குலக முஸ்லிம் பெண்களின்,*'என் தலைக்கு உள்ளேயுள்ள அறிவுக்கூர்மையினைக் கொண்டு என்னை மதிப்பிடு, தலைக்கு மேலேயுள்ள ஹிஜாபைக் கொண்டு அல்ல!'*-எனும் வாசகங்கள் தாங்கிய பதாகைகள் பிரபலம். அந்த வாசகங்கள் எத்துணை உண்மையானவை என்பதை மீண்டும் ஒரு முறை மெய்ப்பிக்கச் செய்துள்ளனர் முஸ்லிம் சகோதரிகள்!

அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களை உலகிற்கு வாரி வழங்கிய வரலாற்றை மீண்டும் உயிர்த்தெழச் செய்திருக்கும் ஈரான், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கு முன்னோடியாய் விளங்கி வருவது




அனைவரும் அறிந்ததே! அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் அளிக்கும் தகவலின்படி ஈரானின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1994-2004-க்குள் பத்து மடங்கு உயர்ந்துள்ளது. மிகக் குறிப்பாகச் சொல்ல வெண்டும் என்றால் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான துறையில் அதிகரித்துள்ளது.

இத்தகைய விழிப்பு உணர்வின் காரணமாக ஈரானிய




சமுதாயம் சர்வதேச அளவில் சாதனைகளை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கின்றது. அறிவைத் தேடுவதில் இஸ்லாம் வலியுறுத்தும் ஆண்-பெண் பால் பேதமின்றி 'அறிவைத் தேடுதல்' எனும் அடிப்படை இங்கே நிரூபணமாகிக் கொண்டிருக்கின்றது.

ஆம்! தென்கொரிய தலைநகரான சியோலில் நடந்த சர்வதேச அளவிலான பெண் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் 12 தங்கப்பதக்கங்களும், 5 வெள்ளிப்பதக்கங்களும், 6 வெண்கலப்பதக்கங்களும் அள்ளி ஈரானிய முஸ்லிம் பெண் விஞ்ஞானிகள் முதலிடம் பெற்றுள்ளனர். விஞ்ஞானத்தில் சாதனை புரிந்து வரும் 25 நாடுகள் இதில் கலந்து கொண்டனர்.

சகோதரி *மெஹ்ராஜ் கோல்கின்ஃபர்* எனும் முஸ்லிம் பெண், மின் உற்பத்தி திட்டம் (Electricity Generator System) ஒன்றை வடிவமைத்ததற்காக சிறப்பு பரிசு பெற்றுள்ளார். மூன்றாம் உலக நாடுகளின் பயன்பாடுகளுக்காக என்றே தனித்துவமாகவும் அதேவேளை சுற்றுப்புறச் சூழல்களுக்கு மாசு விளைவிக்காத முதல் மின் உற்பத்தி நிலையம் என்பதாலும் இவரது கண்டுபிடிப்பு சிறப்புப் பரிசை வென்றுள்ளது.

சகோதரி *சோனியா சப்ரீ* அவர்களின் பல்வேறு மூலப்பொருட்கள் சேர்ந்து உருவாக்கும் 'நானொ காம்போஸைட்' கண்டுபிடிப்புக்கள் -World Intellectual Property Organization (WIPO) பரிசினைத் தட்டிச் சென்றுள்ளது.

அதே சமயம் சகோதரி *மர்யம் இஸ்லாமி* என்பவரின் எலும்புகள்




தொடர்பான நோய் அறுவை சிகிச்சை முறைக்கான புதிய தொழில்நுட்பம் - International Federation of Inventor Associations (IFIA) -இன் பரிசை வென்றுள்ளது.

# முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு சிறப்புத் திட்டம்

இந்திய முஸ்லிம்களின் கல்வி,பொருளாதார,வீட்டு வசதி மற்றும் உடல்நல் அம்சங்களுக்காக ரூ.5500 கோடி திட்டமொன்றை இந்தியாவின் பழம்பெரும் இஸ்லாமிய இயக்கமான ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் வடிவமைத்துள்ளது. இதனால் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஏழை முஸ்லிம்கள் பயனடைவார்கள். இந்திய முஸ்லிம்களின் சமூகப் பொருளாதார நிலை பற்றிய உண்மைகளை படம் பிடித்துக் காட்டிய சச்சார் கமிட்டியின் பரிந்துரைகளுக்கேற்ப சுமார் 500 கோடி ரூபாய் செலவில் பன்னாட்டு தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் உருவாக்கவுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் உருவாக்கப்படவுள்ள மேம்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கவும் மாணவர் தங்கும் விடுதிகளைக் கட்டவும் சுமார் 900 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் தெரிவித்துள்ளது.





இந்தியாவிலுள்ள 14 கோடி முஸ்லிம்களில் மிகவும் ஏழைகளாக இருப்போரை மேம்படுத்துவதற்காக ஜமாத்-இ-இஸ்லாமி ஹிந்த் VISION 2016 எனும் திட்டத்தை வடிவமைத்துள்ளது. மத்திய-மாநில அரசுகள் இந்திய முஸ்லிம்களின் மேம்பாட்டுக்காகத் தொடர்ந்து பல கவர்ச்சிகர திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதாகக் கூறினாலும், முஸ்லிம் சமூகத்தினரின் ஆர்வமான மற்றும் தீவிரமான பங்கேற்பு மூலமாக மட்டுமே அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட முடியும் என இப்போது முஸ்லிம்களில் பெரும்பாலோர் நம்புகின்றனர்.

உடல்நலத்துறையைப் பொறுத்த வரையில் சுமார் 200 கொடி செலவில் பல்வசதி சிறப்புக்கூறு மருத்துவமனை - Multi Speciality Hospital ஒன்று நிறுவப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உடல்நலத்தைப் பொறுத்தவரை 800 கோடி செலவழிக்கப்படவுள்ளது. ஏழை முஸ்லிம்களின் வாழ்க்கையை மேம்படுத்த 10 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படவுள்ளன. 100 மாதிரி இஸ்லாமிய கிராமங்கள் - Model Islamic Villages உருவாக்கப்படும்.இவை 2016-ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும். சிறப்பான துவக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை இவை கொண்டிருக்கும். ஆக்கபூர்வமாக ஏழை முஸ்லிம்களின் மேமபாட்டுக்காக வகுக்கப்படவுள்ள இத்திட்டங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.இந்திய இஸ்லாமிய மனிதவள மேம்பாட்டு வரலாற்றில் புதிய மைல்கல்லைத் தொடவிருக்கும் இந்த சாதனைத் திட்டம் முழுமையாக நிறைவேற இறையருள் துணை நிற்கட்டும்!







# அதிசய சம்பவம்...! அன்னை தந்த அழகிய ஆனந்தம்...!

ஆக்கம் : ப்ர்ஸானா ர :.பீக்



**இக்கட்டான வேளையிலும், தனது கணவருக்கு ஆறுதல் தந்த அன்னை கதீஜா (ரலி) அவர்களின் உன்னத பண்பாட்டை விளக்குகின்றார் தொடர் ஆசிரியர்!**

அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அப்போது வயது நாற்பதை நெருங்கிக் கொண்டிருந்த வேளை!. ஒரு மனிதனின் பக்குவப்பட்ட பருவகாலமாக இருக்கும் இக்காலங்களில் அண்ணலார் (ஸல்) அவர்கள் தனிமையை மிகவும் விரும்புபவர்களாக இருந்தார்கள். அறியாமையில் மூழ்கி இருந்த மக்களை எப்படி நல்வழிப்படுத்துவதென்றும், படைப்புக்களைப்பார்த்து படைப்பாளனின் வல்லமைகளைப் பற்றியும் சிந்திப்பவராக இருந்தார்கள்.பெரும்பாலான நேரங்களில், மக்காவில் அமைந்துள்ள ‘ஜபலுன்நூர்’ எனும் மலையில் இருக்கும் ஹிரா குகைக்குச் சென்று தனித்திருப்பார்கள்.

இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் மனைவி கதீஜா (ரலி) அவர்கள் தனது கணவனின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி வந்தார்கள். இவ்வாறே நாட்கள் நகர்ந்தன.

அப்போது ஒரு நாள்!

புனித ரமளான் மாதம் அது!

வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அவர் முன் தோன்றி இறைசெய்தியைக் கொணர்ந்து, அண்ணலார் (ஸல்) அவர்கள் இறைத்தூதராக தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை அறிவிக்கின்றார்.

இந்தப் புது அனுபவத்தின் அதிர்ச்சியுடன், வீடு திரும்பிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், பீதி மிகைத்தவர்களாக “என்னைப் போர்த்துங்கள் என்னைப் போர்த்துங்கள்” என்று கூறினார்கள். சற்றே ஓய்வெடுத்த பின்னர், மனைவி கதீஜாவிடம் நடந்த செய்தியைத் தெரிவித்து விட்டுத் தமக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என அஞ்சுவதாகவும் இறைத்தூதரவர்கள் கூறினார்கள். அவ்வேளை, அவர்களை அமைதிப்படுத்தி ஆறுதல் வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்தியவர், உத்தமி கதீஜா (ரலி) அவர்களே!.

அவர்கள் கூறியதைக் கேளுங்கள்! “அவ்வாறு கூறாதீர்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்தமாட்டான். (ஏனெனில்) தாங்கள் உறவினர்களுடன் இணங்கி வாழ்கிறீர்கள், (சிரமப்படுவோரின்) சுமைகளை சுமந்து கொள்கிறீர்கள், வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள், விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள், உண்மையான சோதனைகளில் (சிக்குண்டோருக்கு) உதவி புரிகின்றீர்கள்”. அத்துடன் முடித்துக் கொள்ளாது நபி (ஸல்) அவர்களைத் தமது தந்தையின் உடன் பிறந்தவரான ‘வரகா இப்னு நவ்:.பல்’ என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

‘வரகா’ ஈஸா (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டவராகவும், மேலும், பைபிள் வேதத்தைக் கற்றவராகவும் இருந்தார்கள். வயது முதிர்ந்தவர் கண்பார்வையற்றவர். அவரிடம் கதீஜா (ரலி) “என் சகோதரரே! உம் சகோதரன் மகன் கூறுவதைக் கேளுங்கள்!” என்றார். “என் சகோதரர் மகனே! நீர் எதைக் கண்டீர்!” என வரகா கேட்க, நபி (ஸல்) அவர்கள் தாம் பார்த்த செய்திகளை அவரிடம் சொன்னார்கள். அதற்கு வரகா “உம்மிடம் வந்தவர்தாம் மூஸாவிடம் இறைவன் அனுப்பிய நாமூஸ் (ஜிப்ரீல்) ஆவார்” என்று கூறிவிட்டு, ஐயகோ! உமது சமூகத்தார் உம்மை உமது ஊரிலிருந்து வெளியேற்றும் வேளையில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருந்திருக்க வேண்டுமே!” என்று அங்கலாய்த்தார். நபி (ஸல்) அவர்கள் ‘ என் மக்கள் என்னையா வெளியேற்றுவார்கள்?” என்று கேட்டார்கள். அதற்கவர் “ஆம்! நீங்கள் கொண்டு வந்திருப்பது போன்ற சத்தியத்தைக் கொண்டு வந்த எந்த (இறைத்தூதரான ஒரு) மனிதரும் (அவருடைய சமூகத்தாரால்) பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. (நீங்கள் வெளியேற்றப்படும்) அந்நாளில் நான் உயிருடன் இருந்தால், உங்களுக்குப் பக்கபலமாக இருந்து உதவி செய்வேன்” என்று கூறினார்.


இதனைக் கேட்ட மாத்திரத்தில் அன்னை கதீஜா(ரலி) அவர்கள் உடனே முதலாமவராக, அல்லாஹ்வையும் அவனிடமிருந்து வந்த வேதத்தையும், தமது கணவரான முஹம்மத்(ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதராகவும் ஏற்று நம்பிக்கை கொண்ட முதல் பெண்மணியாக இஸ்லாமிய வரலாற்றில் தம்மை பதிவு செய்துகொண்டார்கள்.

## சிந்தனைத் துளிகள்!



நோயை விட அச்சமே அதிகம் கொல்லும்!

முழுமையான மனிதர்கள் இருவர். ஒருவர் இன்னும் பிறக்கவில்லை. மற்றவர் இறந்துவிட்டார்!



# வண்ணம் தீட்டி மகிழ்வீர்

அன்புச் சிறுவர்-சிறுமியரே.!
கீழ்க்காணும் படத்துக்கு
அழகிய வண்ணங்கள் தீட்டி மகிழுங்கள்!












ஆக்கம் சௌந்தர்யம்



## இதோ, உங்கள் செல்லப் பிள்ளைகள் !



முஹம்மத் ஷாஹின்

வயது - 2 வருடங்கள்
பெற்றோர்: M. ஷேக் அலாவுதீன் பரகத் நிசா
அம்பரகத்தூர், புதுவை
இந்தியா
சால்மியா, குவைத்



ஹிபா

வயது - 3 1/2 வருடங்கள்
பெற்றோர்: A. முஹம்மத் அமீன் நூருன்னிஸா
அம்பரகத்தூர், புதுவை
இந்தியா
சால்மியா -குவைத்

## தமிழ் கற்போம் வாருங்கள்!

பிள்ளைகளே! உங்களுக்குத் தெரியுமா? தமிழ் மிகவும் பழமை வாய்ந்த மொழி! பலருக்குத் தமிழ் தாய்மொழியாக இருப்பினும், வீட்டில்கூட தாய்மொழி பேச தெரியாது நம்மில் பலர் குவைத்தில் வசித்துக் கொண்டிருக்கின்றோம். எவ்வளவு வேதனையான விஷயம் இது!

குவைத் பள்ளிக்கூடங்களில் அந்நிய மொழியாக பெரும்பாலோர் கற்பது இந்தி அல்லது வேறு மொழிதான்!

அத்தகைய பிள்ளைகளுக்கு உதவும் வகையில் இந்த புதிய பகுதி தமிழக் கற்றுத் தரும் பணியை இயன்றவரை செய்யும். என்ன, ஆரம்பிப்போமா, பிள்ளைகளே!

பொதுவாக இலக்கணப்படி, தமிழ் எழுத்துக்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள், ஆய்த எழுத்து!

உயிரெழுத்துக்கள் - ௧௨ மெய்யெழுத்துக்கள் - ௧௮ உயிர்மெய்யெழுத்துக்கள் -௨௧௬ , ஆய்த எழுத்து - ௧ முதலில் உயிரெழுத்துக்களைப் பார்ப்போமா?

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ



11-ஆம் பக்க தொடர்ச்சி...

பொருளுடைமைகளுக்குப் பின்புலம் தனது ஆற்றலும் சிந்திய வியர்வைத் துளிகளும், உடற்பலமுமே காரணம் எனும் பலவீனமான எண்ணமும் கர்வமும் கொண்ட மனிதன் ஆட்கொண்ட அனைத்தும் அவனின் மரணம் வரையே! இத்தகைய நிந்தனைத் தாக்கமுள்ள சிந்தனை கொண்ட சமூகம் தன் நிலையை பூரணமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் சுபீட்சம் மலரும். ஏழை மனங்களும் குளிரும்!

2. அடுத்து மனிதம் மலர்ந்து ஏழ்மையை தவிடுபொடியாக்கச் செய்யும் மற்றுமொரு திறவுகோல் மனிதர்களிடையே காணப்பட வேண்டிய தர்மங்கள். இதில் இரண்டு வழிமுறைகள் உண்டு!

அ.உறவினர்களின் கடமையான பரிசளிப்பு மூலம் செய்யப்படும் தர்மம். எந்த மதமும், எந்த உலக மாநாடுகளும் தராத வறுமை ஒழிப்பு தீர்வை இஸ்லாம் பிரகடனப்படுத்துகின்றது. அதுவே, வசதி படைத்தவர்கள் வறியவர்களான தம் உறவினரை பரிபாலிக்கும் கடமையான அம்சம்.இந்த தர்ம பரிபாலிப்பு பரஸ்பரம் குடும்ப உறவுகளுக்கிடையே காணப்படின் வறுமைக்கு வழி ஏது? இந்த பரிபாலிப்புக்கள் வறுமையை மட்டுமா ஒழிக்கும்? பிரிந்து கிடக்கும் மனங்களை அன்பு இதங்கள் கொண்டல்லவா இணைக்கும்? உறவுகளை எ.்.குப் போன்றல்லவா பலப்படுத்தும். சண்டை-சச்சரவுகளை, உட்பூசல்களை வேருடன் அல்லவா பிடுங்கி எறியும். வேதனைகளை இல்லாதொழித்து மனிதத்தையல்வா மலரச் செய்யும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் இதுபற்றி கூறும்போது,

*'ஈத்தப்பழத்தின் ஒரு கீற்றையேனும் தர்மமாகக் கொடுத்து நரகநெருப்புக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்!*

தர்மங்களுக்குக் கூலியாக தர்மத்தின் தலைவன் அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்: *எவர்கள் தங்களுடைய பொருள்களை இரவிலும் பகலிலும், இரகசியமாகவும், வெளிப்படையாகவும் செலவு செய்கின்றார்களோ, அவர்களுக்கு அவர்களின் அதிபதியிடம் உரிய கூலி இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்!*

*-திருக்குர்ஆன் 2:274*

ஆ.வறுமையை வழக்கொழிக்கும் தர்ம திறவுகோல்களில் இன்னொரு வழிமுறை மனிதர்களிடையே வழங்கப்படும் பரிசுப்பொருட்கள். இது மறைமுகமாகத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் வறுமையைப் போக்க வல்லது. ஆனால் இதுகுறித்து சமூகம் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. காரணம் பிரதிபலன் எதிர்பார்க்கும் சுயநலமிக்க சமூகமாக மனித சமூகம் இருப்பதே!

ஆனால், தமது வறுமையின் கொடுமையை வெளிக்காட்டி கையேந்தாமல், இயலாமையால் தன்னடக்கம் கொண்டு வாழும் மனிதர்களின் வறுமையை இத்தகைய பரிசுப் பொருட்கள் பகிரந்தளித்தலே நீக்க முடியும்! இதனால்தான், படைப்பினங்களின் அதிபதி திருக் குர்ஆனில் இத்தகையோரை அடையாளம் காட்டி, அவர்களுக்கு தர்மம் வழங்க ஊக்குவிக்கின்றான்:-

*பூமியில் (தம் தேவைகளுக்காக) ஓடியாடி உழைக்க முடியாத வண்ணம் அல்லாஹ்வின் பாதையில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களான வசதியற்றவர்கள்தாம் உங்கள் தர்மங்களுக்கு மிகவும் உரித்தானவர்கள் ஆவர்! அவர்களைப் பற்றி அறியாதவர், அவர்களிடமுள்ள தன்னடக்கத்தைக் கண்டு அவர்களை தன்னிறைவு பெற்றவர்கள் என எண்ணுகின்றார்கள். அவர்களின் மனங்களைப் பார்த்தே அவர்களின் உண்மைநிலையை நீர் அறிந்துகொள்ளலாம். ஆனால், அவர்களோ, மக்களிடம் வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்கமாட்டார்கள். (அவர்களுக்காக) நீங்கள் எந்தப் பொருளை செலவு செய்தாலும் நிச்சயமாக. அதனை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.*

*(திருக்குர்ஆன் - 2:273*

எனவே, பரிசுப்பொருட்களாக தேவைகளின் நிமித்தம் கொடை தரப்படும் தர்மம் ஒரு சில வாழ்வியல் வெற்றிடங்களையேனும் நிரப்பவல்லது. முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது காலத்தில் தேவையுடைய முஸ்லிம்களுக்கு அவர்தம் சுயகவுரவம் பாதிக்கப்படாத வகையில், பரிசுப் பொருட்கள் வழங்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைத்தார்கள். பாருங்கள்! மறைமுகமாக வளரும் கவுரவ வறுமையைக்கூட இஸ்லாம் எத்தகைய வடிவில் போக்குகின்றது என்பதை! இன்று இத்தகைய தீர்வுகளை எந்த தத்துவமோ, கொள்கைகளோ தரமுடியுமா, என்ன?

*சத்தியமானதாகத் திகழும் இஸ்லாம் திட்டமிட்ட வாழ்க்கைப் புள்ளிகளில் ஒருவனது வாழ்வை சங்கமிக்கச் செய்யக்கூடியது. இத்தகைய வாழ்வை ஒப்புக்கொண்ட நடைமுறைப்படுத்துவதில்தான் ஒருவனது வெற்றி அடங்கியுள்ளது. அவ்வாறு அவன் செய்வானாகில் உன்னத வாழ்க்கையை ஈருலகிலும் இறைதிருப்தியுடன் அடைந்து கொள்வான்.*

*இது இறைமையின் சித்தம்.., இறுதி மனித மூச்சு வரை..!!*

■



# சித்தத்தை உறைய வைக்கும் வியத்தகு பக்கங்கள்!

அனல் வீசும் மணற் காட்டில்
அடிபட்டோர் எத்துணை பேர்
அம்பீட்டி வாட்களுக்கு, ஆளானோர்
எத்தனை பேர்?

பசி தணிக்க கல் கட்டி
பரி தவித்தோர் எத்தனை பேர்
பொல்லா வெறிகளுக்கு ஆளாகி
வீழ்ந்திறந்தோர் எத்தனை பேர்?

காலி ரண்டை ஒட்டகையில்
கட்டி யோட்டி உயிரழித்த
மா பாவக் கொடுமையினால்
மரணித்தோர் எத்தனை பேர்?

தீகுழிகள் தின்றழித்த
தீன் மணிகள் எத்தனை பேர்?
புனித போர்க் களத்தில் உயிரீந்த
பொன் மணிகள் எத்தனை பேர்?

சத்தியத்தின் நெறி காக்க
எத்துணை தியாகங்கள் - அவை
சித்தத்தை உறைய வைக்கும்
வரலாற்றின் பக்கங்கள்!

ஆக்கம் B. சிக்கந்தர் கான்



# அழகுகளில் ஆரம்பம், அனர்த்தங்களில் முடிவு!



ஆக்கம்: ராபிதா

சில பெண்கள் அழகுக்காக குதிகால்கள் உயர்ந்த பாதணிகள் அணிகின்றனர். ஆண்கள் உயரத்துக்காக ஹை-ஹீல்ஸ் ஷூக்கள் அணிகின்றனர். ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி, மேடு பள்ளம் இல்லாத சமதளமான பாதணிகள் அணிவதே சிறந்தது. பாதணிகளில் இரண்டு செ.மீ. சுமார் அரை இஞ்ச் அளவுக்குப் பின்னங்கால் உயரம் அதிகம் இருந்தால் பரவாயில்லை. ஆனால், இரண்டு இஞ்ச், மூன்று இஞ்ச் உயரத்துக்கும் அதிகமாக ஹைஹீல் பாதணிகள் அணிந்தால் உடலில் பல பிரச்னைகள் வந்து சேரும். அது உடல் ஆரோக்கியத்துக்க நல்லதல்ல!

முக்கியமாக இடுப்பு வலி வரும். குதிகால் உயரமான பாதணிகளை அணியும்பொழுது உடல் எடை முழுவதும் பூமியில் நிற்காமல் இடுப்பு, மூட்டு போன்ற பகுதிகளில் குவிந்து முழு பாரமும் உடலிலேயே தங்குகின்றது. இதனால், இடுப்பு வலி தொடைக்குக் கீழே கால் பகுதிகளில் வலி வந்து, தாள மடியா பயங்கர தொல்லையைக் கொடுக்கும்.

மேலும், குதிகால் செருப்பு போட்ட நடக்கத் தெரியாத அரம்ப காலத்தில் சிறிது கால் இடறினால்கூட, கால்பகுதியில் பாதிப்பு பலமாக இருக்கும். நம்நாட்டு பெண்களில் சிலர் வெளிநாட்டுப் பெண்களைப் போன்று ஸ்டைலாக ஹை ஹீல்ஸ் அணிய வேண்டாம் என்றும் ஆண்கள் ஹீல்ஸ் ஷூ அணிய வேண்டும் என்று நினைக்கின்றார்கள். வெளிநாட்டுப் பெண்கள் எப்போதும் ஹை ஹீல்ஸ் அணிவதில்லை. வேலைக்கு செல்கின்ற பெண்கள் மட்டுமே ஹை ஹீல்ஸ் அணிகின்றார்கள். மற்ற குடும்பப் பெண்கள் ஏதாவது முக்கிய விழாவில் கலந்துகொள்ள மட்டுமே உயர் குதிகால் பாதணிகள் அணிகின்றார்கள். இன்னும் உயர் குதிகால் பாதணிகள் அணிவோரும்கூட அதிகம் சாப்பிடாமல் இருந்து, தினமும் வழமையான உடற்பயிற்சிகள் செய்து தங்கள் உடலைக் கச்சிதமாக வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் உடல் எடையை சீராகப் பராமரித்து ஹை ஹீல்ஸ் அணிவதன் மூலம் வருகின்ற பிரச்னைகளிலிருந்து தப்பிவிடுகின்றார்கள்.

நம் நாட்டுப் பெண்களிடம் இதுபோன்ற விஷயங்கள் குறைவு. எனவே அவர்கள் குதிகால் உயர காலணிகளை அறவே தவிர்த்துவிடுவதே சாலச் சிறந்தது.

மேலும், குதிகால் செருப்பு ஒருவரை ஒருவித கர்வத் தோற்றத்துடன் நடக்க வைக்கும். எந்தவிதத்திலும் இத்தகைய செருப்பு போட்டுக் கொண்டு அடக்க, ஒடுக்கமாக பவ்யத்துடன் நடப்பது என்பது இயலாத ஒன்று. எனவே, அடக்கத்தை அடக்கம் செய்துவிட்டு கர்வ மிடுக்குடனே அது நடக்க வைக்கும்.


இறுதியாக அழகு என்பது உடையிலும், காலணியிலும் இல்லை அது மனத்திலும், பண்பாட்டுப் பழக்கங்களிலுமெ அடங்கியிருக்கின்றது. அழகுக்காக உடல்நலப் பிரச்னைகளை விலை கொடுத்து வாங்கும் இதுபோன்ற செயல்களை விட்டொழிப்போம்.


*....பூமியில் செருக்காக நடக்காதீர்கள். ஏனெனில், உம்மால் பூமியைப் பிளந்துவிட முடியாது, மலையளவுக்கு உயர்ந்துவிடவும் முடியாது. திருக்குர்ஆன்* 17:37

*..பூமியில் செருக்காய் நடக்காதே! அகந்தையும் ஆணவமும் கொண்ட எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. உனத நடையில் மிதமான நிலையை மேற்கொள்! திருக்குர்ஆன் 31:18*

படம்: வடிவம் முஸ®







நாளும் நம் சூழலின் மாற்றங்கள், முன்னேற்றங்களை, நாழிகை
நடப்புக்களை, செய்தித் துளிகளாக சுற்றத்துச் செய்திகள் ஏந்தி
உங்கள் அறிவின் அரங்கங்களை
மென் மேலும் புதுமை கொணரச்செய்யும்.

# பிம்பம் உடைத்த பஹ்ரைன் பாவை!

பஹ்ரைனைச் சார்ந்த ருகையா-அல்-கஸ்ராவின் சாதனை முஸ்லிம் விளையாட்ட வீராங்கனைகளுக்கு புத்துணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக ஹிஜாப் அணிந்து விளையாட்டில் பங்குபெறும் பெண்களுக்கு! தலை முதல் கால் வரை மறைக்கப்பட்ட உடை அணிந்து, ஒலிம்பிக் 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பிரான்ஸ் வீராங்கனையைப் பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்து ஹிஜாபினால் தன்னுடைய விளையாட்டிற்குத் தடங்கலில்லை என்பதை உலகிற்கு நிரூபித்திருக்கின்றார், இந்த முஸ்லிம் வீராங்கனை.



இவருக்கான "ஹஜுத்" (H j ood) உடையை ஆஸ்திரேலியாவைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கான உடைகள் தயார் செய்யும் நிறுவனம் பிரத்யேகமாக தயாரித்திருக்கின்றது.



நவீன (நிர்வாணகோல) பெண்ணியத்தில் அந்நியர்களின் ஆபாசப் பார்வைகளிலிருந்து பெண்களைப் பாதுகாத்து, அவர்களுக்குச் சமூகத்தில் கண்ணியத்தையும் மரியாதையையும் அளிக்கும் பர்தா உடை முறையினை எதிர்த்துக் கூக்குரலிடும் பெண்ணியப் போராளிகள், 'பர்தா என்பது முஸ்லிம் பெண்களை அடக்கி ஒடுக்குகின்றது' எனக் கூறுவதற்கு விளையாட்டுக்களில் முக்கியமாகத் தடகள விளையாட்டுக்களில் முஸ்லிம் பெண்கள் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தமையையும் ஒரு காரணமாக சுட்டிக் காட்டியிருந்தனர்.

இயன்றவரை உடலிலிருந்து ஆடைகளை அப்புறப்படுத்தி இரண்டு துண்டுகளை உடலில் சுற்றிக் கலந்துகொண்டாலே தடகளப் போட்டிகளில் வெற்றிக்கு வாய்ப்பு அதிகம். பர்தா பெண்களுக்கு அது இயலாத ஒன்று எனும் ஒரு தவறான பிம்பமும் இவர்களால் உருவாக்கப்பட்டிருந்தது.

பெண் சுதந்தரம் என்பது அவர்கள் அந்நியர்களின் உடைகளைக் குறைத்து பவனி வருவதில் இல்லை! மாறாக, உடலை மூடுவதில்தான் அவர்களின் உண்மை அழகும் கண்ணியமும் மதிப்பு பெறும் என்பதை பல வேளைகளில் பல்வேறு துறைகளிலும் முஸ்லிம் பெண்டிர் நிரூபித்திருக்கின்றனர்.

அவ்வரிசையில் விளையாட்டுத் துறையில் தடகளப் போட்டிகளில் உடலை மூடி ஆடை அணிவது எந்தவிதத் தடையும் இல்லை என்று சகோதரி ருகையா வென்றதன் மூலம் நிரூபித்துத் தன் நாட்டிற்கும் பெருமை தேடித் தந்திருக்கின்றார்.

இதிலிருந்து, சமூகத்தில் பெண்களின் ஆடை மூடாமலிருப்பது ஆண்களின் கழுகுப் பார்வைக்கான விருந்தே அன்றி, அது அவர்களின் முன்னேற்றத்தை உயர்த்துவதற்கு அல்ல என்பதை இனிமேலாவது பெண்ணிய சமூகமும் போலி பெண்ணியவாதிகளும் புரிந்துகொள்ளட்டும்.பொது இடங்களில் உடை குறைத்தலில்தான் பெண் சுதந்தரம் அடங்கியிருக்கின்றது எனும் போலி பிம்பத்தை உடைத்த சகோதரிக்கு வாழ்த்துக்கள்!

## அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறித்த அருங்காட்சியகம்: நிர்மாணிக்கின்றது துபை!



மனிதகுலத்திற்கு ஓர் அருட்கொடையாக வந்த அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அன்னார் அவர்களின் இறைச்செய்தியையும் அறிவிக்கும் முகமாக ஓர் அருங்காட்சியகத்தை நிறுவ துபையின் ஆட்சியாளரும் அமீரகத்தின் துணை அதிபருமான *அஷ்ஷேக் முஹம்மத் பின் ராஷித்-அல்-மக்தூம்* ஆணையிட்டுள்ளார்

அண்ணலார் (ஸல்) அவர்களின் இறைசெய்தி எக்காலத்து மக்கள் வாழ்விலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. இறைசெய்தி வரும் முன் அறியாமைக்கால அரபுலக நிலை, இறைசெய்தியை சமர்ப்பிக்கும்போது அண்ணலார் (ஸல்) அடைந்த துன்பங்கள், ஹிஜ்ரத் - புலம்பெயர்தல், மதீனா வாழ்க்கை, மக்கா வெற்றி, அண்ணலார் (ஸல்) அவர்களின் மரணம் போன்ற நிகழ்வுகளைப் படிப்படியாக ஆவணங்கள் மூலம் இவ்வருங்காட்சியகம் விளக்கும்.

இவை மட்டுமின்றி இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளையும் எளிதாக விளக்கும் வகையிலும் காட்சிப் பொருள்கள் இடம்பெறும்.

துபையின் கலை மற்றும் பண்பாட்டு மையம் இப்பணியை மேற்கொள்ள இருக்கின்றது.

மனித குல வரலாற்றில் வேறெவரையும்விட மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இறைசெய்தியையும் அவர்களின் களங்கமற்ற வாழ்க்கை முறையையும் உலகிற்கு அறிவிக்கும் முகமாக இந்த அருங்காட்சியகம் அமையப் பெறும்.

உலகின் பல்வேறு கலாச்சார, இன மக்கள் கூடும் பெருநகரமான துபையில் இவ்வருங்காட்சியகம் அமைவதன் மூலம் உலகின் பல்வேறு மூலைகளிலிருந்தும் வரும் மக்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் மனிதகுல உய்விற்குக் கொண்டுவந்த செய்தி சென்றடையும் என நம்புவோம்.

## உலகின் அதிவேக விரைவுக் கணிணி
### Fastest Super Computer


இந்த பேரண்ட சராசரத்தில் சர்வ வல்லமை படைத்த படைப்பாளன் மறைத்து வைத்துள்ள அருட்கொடைகள் எண்ணிலடங்காதவை. படைப்பினங்களில் உயர் படைப்பான மனிதஇனத்துக்கு அவற்றைக் கண்டறியும் ஆற்றலை அந்த ஏக படைப்பாளன் வழங்கியுள்ளான். இத்தகைய சிந்தனையை யார் சரியாகப் பயன்படுத்துகின்றாரோ, அந்த மனிதன் பல்வேறு சிறப்பான கண்டுபிடிப்புக்களை வெளிக் கொணர முடியும்.

இதனை பறைசாற்றும் விதமாக ஒரு அதிவேக விரைவுக்கணிணியை அமெரிக்க நிறுவனமான IBM நியூ மெக்ஸிகோவைச் சேர்ந்த 'லாஸ் அலமாஸ்' எனும் நிறுவனமும் இணைந்து 100 மில்லியன் டாலர் செலவில் (1 மில்லியன் 10 இலட்சம், 1 டாலர் சுமார் 48 இந்திய ரூபாய்-100 இலங்கை ரூபாய்) உருவாக்கியுள்ளன.

'ரோட் ரன்னர்' என்றழைக்கப்படும் இந்த கணிணியை உருவாக்கிய இதே IBM நிறுவனம் இதற்கு முன்னர் உருவாக்கிய அதிவிரைவுக் கணிணியான ப்ளு ஜீன் (Blue Gene)-ஐக் காட்டிலும் இது இரு மடங்கு வேகமாக செயல்படும்.

தற்போதைக்கு அமெரிக்க அணு ஆற்றல் சோதனைக் கணக்கீடுகளுக்குப் பயன்படுத்தப்பட இருக்கும் இக்கணிணி, கட்டுமானப் பொறியியல், மருத்துவ ஆய்வு, இயற்கை எரிபொருள் உருவாக்கம், எரிபொருள் சேமிப்பு வாகனங்களை வடிவமைத்தல், மருத்துவ சிகிச்சை மற்றும் நிலத்தடி எரிபொருள் ஆய்வு உள்ளிட்ட பற்பலப் பயன்பாடுகளுக்காகவும் பயன்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, கணிணி தொழில்நுட்ப துறையில் மேலைநாடுகளுக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் இந்தியாவிலும் Super Computer எனப்படும் அதிவிரைவுக் கணிணிகளை உருவாக்கப்பட்டுள்ளன. மேம்பட்ட கணிணியக மையம் -(Centre for Advanced Computing –CDAC) உருவாக்கிய இந்த அதிவிரைவுக் கணிணியின் செயல்திறன் ரோட் ரன்னருக்கு இணையானது.




பேப்பர் பையன்



# குறுக்கெழுத்துப் போட்டி

# அறிவுக் குறுக்கெழுத்து-6




## பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்!

ஆக்கம் : பின்த் அன்ஸார்

### விதிமுறைகள்

1. இக்குறுக்கெழுத்துப் போட்டியின் பெரும்பாலான வினாக்களுக்குரிய விடைகளை“வசந்தம்” -செப்டம்பர்”,2008 இதழிலிருந்து பெறமுடியும்.
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி,எண்,குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர்கள் 3 பேருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 2400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது amusavir@gmail.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் -SEEMATY, மிர்காப் - Peoples Restaurant,மிர்காப்--Careem Lanka,மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka,மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளை
9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 15.10.2008
10. வெற்றி பெற்றோர் விவரங்கள் நவம்பர் இதழில் வெளியாகும். இறைவன் நாடினால்..!

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள், எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்!

### இடமிருந்து வலம்.

1.பெருமதிப்புமிக்க கற்களில் ஒன்றான இது அகழ்ந்தெடுக்கப்படக் கூடியது.(7) 5. 24 மணிநேரங்களைக் கொண்டது ஒரு--- ஆகும்(3) 9. நோயின் இன்னொரு பெயர் (2) 13. இஸ்லாம் ஜனிக்கும் முன் இருந்த யுகம் இது(3) 18.இயற்கை மேகத்திலிருந்த பொழிய வைப்பது(2) 36. நடுவைக் குறிக்கும் ஒரு சொல்(3) 47.கடலுக்குள் காணப்படும் இதை ஊதினால் ஒலி எழுப்பக்கூடியது(3) 51.பிறர் மீது பலவந்தமாக உரிமை செலுத்துவதைக் குறிக்கும்(5) 58.சிலர் அடிக்கடி கொறிக்கும் ஒரு வகை தானிய உணவு(3) 65.மனித உடலின் நரம்புகளில் இரத்தம் ஓடும் பகுதி(3) 71.உணவுடன் சம்பந்தப்பட்ட இது வசந்த இதழ் புதிதாக அறிமகப்படுத்தப்பட்ட ஒரு பகுதி. இங்கு குழம்பியுள்ளது(4)

### வலமிருந்து இடம்.

18.சந்திரனைக் குறிக்கும்.அறிவுக்கும் இப்பெயருண்டு(2) 36.இறைவனின் உயர்படைப்பு,ஆறறிவு கொண்டது(4) 80.ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட “இது”-ப்படித்தான் நடக்கும். சிலர் இதைக் காட்டி வாழ்வை நொந்துகொள்வது உண்டு(2)

### மேலிருந்து கீழ்

1.புதுமையைக் குறிக்கும் சொல்(4) 3.முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் அரபு மாதம்(4) 5.ஒவ்வொருவரிடமும் அவருக்கேற்ற --- உண்டு.குழம்பியுள்ளது.மறுபெயர் ஆற்றல்(3) 9.சரி என்பதன் எதிர்ப்பதம்(2) 18.நினைவுடன் சம்பந்தப்பட்ட இது சிலருக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு(3) 30.சிரியா நாட்டின் அரபி மொழிப் பெயர் இது(2) 38.மாதம் என்பதன் மறுபெயரைக் கொண்ட இது வாரத்தின் ஒரு நாள். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.(4) 51.ஆசை,அவா-வைக் குறிக்கும் சொல்(3)

### கீழிருந்து மேல்

47.சிலர் தமது உண்மைத் தன்மையை நிரூபிக்க அடிக்கடி இதனை செய்வர். குழம்பியுள்ளது (5) 51.கடல் மிக்க ---. அதேபோல் பெண் மனமும் இவ்வாறானது என்று கூறுவர்(3) 54. வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் இது குழம்பியுள்ளது(3) 65.நான் என்பதன் பன்மை(2) 80. இளமைப்பருவத்தைக் குறிக்கும் சொல் (3)

*அனைத்து விடைகளையும் நிரப்பிய பின்னர் வட்டமிட்ட சொற்களை ஒழுங்குபடுத்தினால் ஒவ்வொருவரும் தனக்குரிய இதிலிருந்து தட்டிக்கழிக்க இயலாத சொல் (3 எழுத்து) வரும்!*

☐ ☐ ☐

*பெயர்:*

*குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்*

Civil ID OR Passport No:

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

*தொலைபேசி:*

*குவைத்தில் வசிக்கும் இடம்:*

**பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 15.10.2008**

# IPC வலைக்கட்டிகள் உங்கள் சிந்தனைக்கு சீர்மிகு விருந்தாக...!

## சவுந்தர்ய முத்திரை

உங்கள் அறிவுப்பசிக்கு விருந்து படைத்து முத்திரையிட விரைவில்......!

July 18th, 2008

Search

Pages
» About

Archives
» July 2008

Categories
» Uncategorized (1)

Blogroll
» Development Blog
» Documentation
» Plugins
» Suggest Ideas
» Support Forum
» Themes
» WordPress Planet

Meta
» Log in
» Valid XHTML
» XFN
» WordPress

## விரைவில் முத்திரை பதிக்க வருகின்றது...!

கருநித்திரை போக்கி ஒளிமுத்திரை பதிக்கும் வாழ்வியல் வண்ணங்களாய்
சிந்தனை வானில் சீர்தூக்க வைக்கும்
செம்மனத்தூறல்களாய் வாழ்வானில்
தூயநெறி போதிக்கும் புதினங்களாய்
உள்ளவாழ்வியலை உன்னதப்படுத்தி...
இதயங்களை இதங்கள் கொண்டிணைக்கும் இனிமையாய்...
இருமைஉலக வெற்றிக்கும் கட்டியம் கூறும் காவியமாய்...
அறிவுபதிக்க வருகின்றது..விரைவில்...!

## சௌந்தர்ய முத்திரை!

http://zinoofa.ipcblogger.com

## விடியலை நோக்கி...!

## விரைவில் விடிய இருக்கின்றது...!

Search

Pages
» About

Archives
» July 2008

Categories
» Uncategorized (1)

Blogroll
» Development Blog
» Documentation
» Plugins
» Suggest Ideas
» Support Forum
» Themes
» WordPress Planet

Meta
» Log in
» Valid XHTML
» XFN
» WordPress

இருள்சூழ் மனங்களை ஒளியின்பால் ஈர்க்கும் புத்தொளியாய்...
கருந்தேள் மானுட எண்ணங்களை கறையகற்றும் கொள்கையாய்...
மாச்சர்யங்களை மாய்ந்துபோகச் செய்யும் மானுடவியலாய்...
மதிமயங்கும் கொள்கைளகற்றி...
மனம்குளிரச் செய்யும் நெறி போதிக்கும் நேர்வழியாய்...
புதிய விடியலை நோக்கி உங்களை நகர்த்த..விரைவில் ..!

## விடியலை நோக்கி!

http://farzana.ipcblogger.com

## தேன் சிந்தனைகள்!

August 20th, 2008



Posted in The Holy Ramadhan - புனித ரமளான்! | No Comments »

## தற்போது வலம் வருகிறது...!

http://musawir.ipcblogger.com

## தேன் சிந்தனைகள்

வான் பொன்ற தேன் சிந்தனைகள்... துளிகளாய் ....
உங்கள் வாழ்வை செதுக்கும் உளிகளாய்.....
அனைத்துமே நல்மொழிகளாய்...
சிந்தனைக் கூற்றை நேராக்கும் கூர்மதியாய்...
சூழும் உங்களை வெள்ளொளிகளாய் .....!
வலைககட்டியாய் வலம்வந்து கொண்டிருக்கின்றது...!



மூபத்து தினங்கள் இறை கட்டளையை இனிதேற்றோம் - எம்
இதயங்கள் சுத்திகரிக்க......
தொடராய் வந்த திருநாளிலும் அகமகிழ்ந்தோம்.
உள்ளங்களில் உவகை பூக்க.....

## பெருநாள் வாழ்த்தஞ்சாமையிலே!

இறையாணையின் முன்னிலையில் சிரசுகள் சிரம் பணிந்து....
சந்தோஷப் பூந்தூறல்களில் இதயங்கள் புல்லரிக்க......
புனிதம் பூத்து இதழ் விரித்தது எம் இனிய பெருநாள்.

அனைவரையும் வாஞ்சையுடனும் அன்புடனும் வாழ்த்துகின்றது

## வசந்த குழாமும்...... IPC நிர்வாகமும்.

எத்தினமும் இரத்தினமாய் மிளிர...
எம்மிதயங்கள் இதமாய் குளிர...
இறையருள்கள் மென்மேலும் தளிர....

# "நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்"